வி 39 சதம் 5 | முதற் பதிப்பு | பக்கங்கள் 6

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

Phone: 3411

நாமமாக்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சாவஜித்து வரு மார்கழி மீ 9 உ புதன்கிழமை | Colombo December 24 1947 | ஹிஜிரி 1367 ஸபர் பிறை 11 | இதழ் 203

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்

சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகாரவகைகள், இங்கிலீஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமியாப் பிள்ளை & சன்ஸ்,
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

கிராமங்களில் ஆயுர்வேத வைத்தியசாலைகள்

ஸ்தாபிக்கப்படல்வேண்டும்

கொழும்பு, யாழ்ப்பாணம், காலி ஆகிய இடங்களில் நர்ஸ்கள் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள்

"உணவுக் கமிஷனர் இலாகாவில் நஷ்ட மேற்படுவது வழக்கமாகிவிட்டது"

-திரு. கே. கனகரத்தினம்

கூட்டுறவு சங்கக் கடைகளின் சீர்கேடான முறைகள்

ஆஸ்பத்திரிகளின் அவல நிலைகள்பற்றி அங்கத்தினரின் சரமாரியான கண்டனங்கள்

அராங்க செலவின கோரிக்கைகள் மீது விவாதம்

கொழும்பு, டிச. 23

பாராளுமன்றம் நேற்று பிற்பகல் சபாநாயகர் தலைமையில் கூடியபோது கமிட்டி முறைப்படி பட்ஜெட் விவாதம் தொடர்ந்து நடைபெற்றது.

இந்த விவாதங்களில் ஒருவர் பின் ஒருவராக பல அங்கத்தினர்களும் கூட்டுறவு இலாகா சங்கக் கடைகளின் நிர்வாகத்தைக் கண்டித்துப் பேசியதுடன் திருத்தியமைக்கவேண்டிய சிபார்சுகள் பற்றியும் கூறினர்.

விவசாய இலாகாவிலிருந்த கால்நடை அதிகாரி ஒருவர் மீது கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகளை பொது சேவை கமிஷன் விசாரணை செய்திருந்தது. இந்த விசாரணை விஷயங்களைப் பிரசுரிக்க வேண்டுமென திரு. கே. கனகரத்தினம் வற்புறுத்திப் பேசினர். இதற்கு பிரதமர் பதிலளிக்கையில் முந்திய பிரதம காரியதரிசி மீது குறை கூறினர்.

சுகாதார இலாகா மான்யம்பற்றி விவாதம் நடைபெற்றபோது பல அங்கத்தினரும் சுகாதார இலாகாவின் குறைகளை எடுத்துப் பேசினர்கள். வைத்தியசாலைகள் இட நெருக்கடிகளை நீக்கவேண்டுமென்றும் மருந்து வகைகள் வேண்டுமென்றும். கிராமப் பகுதிகளுக்கு வைத்திய துறையில் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் பலரும் கூறினர்கள். திரு கே. கனகரத்தனம் பேசுகையில் சொழும்பு, யாழ்ப்பாணம், காலி ஆகிய இடங்களில் நர்ஸ்கள் பயிற்சிக் கல்லூரிகள் அமைக்கப்படவேண்டுமென்றும் கிராமப் பகுதிகளெங்கும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும் கூறினர்.

பாராளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபா நாயகர் திரு ஏ. எப். மொல்முரே தலைமையில் கூடியது. நிதி மந்திரியின் சார்பில் பிரதம மந்திரி வரவு செலவுத் திட்ட திருத்தங்களடங்கிய ஜர்பிதா ஒன்றை சபையில் சமர்ப்பித்தார் அடுத்தபடியாக வரவு செலவுத் திட்டம் கமிட்டி முறைப்படி தொடர்ந்து விவாதத்திற்கு எடுக்கப்பட்டது. உணவுக் கமிஷனர் (பகுதி 81) மான்யம் ரூபாய் 100 சம்பந்தமாக திரு ஏ. ரத்னாயகா பேசுகையில் பிரிட்டிஷ் உணவு மந்திரி இலாகாமூலமே இலங்கை சீனி வாங்குவதாகவும் இதனால் அதிக சீனி இலங்கைக்குக் கிடைக்கவில்லையென்றும் தனிப்பட்ட வர்த்தகர்கள் மூலம் அதிக சீனி வாங்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று தாம் கருதியதாகவும் இந்நேரத்தில் பிரிட்டிஷ் உணவு மந்திரி இலாகா 10,000 டன் சீனி அதிகமாக இலங்கைக்குக் கொடுக்க சம்மதித்துள்ளதாகவும் கூறினர்.

திரு என். கீர்த்திரத்ன பேசுகையில் ஒரு மொத்த விற்பனை ஸ்தாபனத்தை அமைத்து சீனி விநியோகத்தை அந்த ஸ்தாபனத்திடம் விடும்படி கூறினர்.

உணவுத் திட்டங்களில் நஷ்டம்

திரு கே. கனகரத்தினம் பேசுகையில் பல உணவுத் திட்டங்களின் கீழும் ஏற்பட்டுள்ள நஷ்டங்களை மந்திரிக்குச் சுட்டிக் காட்டிவிட்டு இந்த விஷயங்கள்பற்றி ஓடிட்டர் ஜெனரலின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளனவென்றும் ஒரு நிட்டத்தில் ரூபாய் 3,57,154 நஷ்டமென்றும் மற்றொன்றில் ரூபாய் 40,000 நஷ்டமென்றும் இந்த இலாகாவில் நஷ்டமேற்படுவது வழமையான விஷயமாகிவிட்டதென்றும் கூறினர்.

ஓடிட்டர் ஜெனரலின் அறிக்கையில் கூறப்பட்ட விஷயங்கள் பற்றி திரு தஹநாயகா பேசினர். ஓடிட்டர் ஜெனரலின் அறிக்கையில் கண்ட சில விஷயங்கள்பற்றி திரு கே கனகரத்தினமும் திரு தஹநாயகாவும் கேட்ட கேள்வகளுக்கு பிரதமர் திரு டி. எஸ். சேனநாயகா பதிலளிக்கையில் திரு விஜயக்கூன் என்பவர் மீது கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றி பொது சேவைக் கமிஷன், விசாரணை செய்து அந்த அதிகாரியை விடுதலை செய்ததென்றும் ஆனால் பத்திரிகைகளும் பொது மக்களும் அவரைப்பற்றி அவதூறாக எழுதியும் பேசியும் வந்தனரென்றும் கூறினர். தொடர்ந்து அவர் பேசுகையில் பழைய அரசியல் திட்டத்தின் கீழ் பொது சேவையில் ஒழுங்குக்கும் சட்டத்துக்கும் பொறுப்பான பகுதியினர் பிரஸ்தாப அதிகாரியை விசாரணை நடத்தி அறிந்தவற்றைப் பிரசுரிக்க விரும்பவில்லையென்றும் அந்த விசாரணை அறிக்கையில் வேறும் ஒரு அதிகாரியைப்பற்றி பிழையான குறிப்புகள் இருந்ததே காரணமென்றும் பிரதம காரியதரிசியைத் தாம் கேட்டபோது அவர் இதே பதிலையே தமக்குக் கூறினர் என்றும் இந்த விசாரணை அறிக்கை பிரசுரிக்கப்படாததினால் தம் மீது பிழையாக குறைகள் கூறப்பட்டனவென்றும் தெரிவித்தார்.

திரு தஹநாயகா:- விசாரணை அறிக்கையை வெளியிடும்படி பொது சேவைக் கமிஷனிடம் கவர்னர் தெரிவித்து அதனைப் பிரசுரித்து விட்டால் எல்லாவித சந்தேகங்களும் நிவர்த்தியாகிவிடும்.

திரு டி. எஸ். சேனநாயகா:- இது விஷயத்தில் நான் தலையிட அதிகாரமில்லை. இந்த அதிகாரி என்னுடைய பொறுப்பில் இருந்த ஒரு இலாகாவில் இருந்தால் நான் இவ்விஷயத்தில் சிறிது கரிசனை எடுக்கவேண்டியிருந்தது.

நிதி மந்திரி இந்தகணக்குகள் முழுவதையும் பரிசோதனை செய்து பெயர் குறிப்பிடாத அதிகாரி சம்பந்தமாக ஏதாவது இருக்கிறதா என்பதை அறியும்படி திரு கே. கனகரத்தினம் கூறினர்.

முழு விஷயத்தின் உண்மையைத் தெரிந்துகொள்ள அறிக்கை வெளியிடப்பட வேண்டுமென்று திரு தஹநாயகா கூறினர். இந்த மான்யம் நிறைவேறியது.

சங்கக்கடை (ரிஜிஸ்தாரர்) அதிகாரி இலாகா (பகுதி 82) மான்யம் ரூ. 3,300,985 சம்பந்தமாக விவாதம் நடந்தது தேவையில்லாத பொருள்கள்- முக்கியமாக ஜவுளி வகைகளும் தகர உணவுகளும் சங்கக் கடைகளால் புதைக்கப்பட்டதாகவும் இது விசாரிக்கப்பட வேண்டுமென்றும் திரு தஹநாயகா கூறினர். திரு டபிள்யூ பெரேரா, திரு பீட்டர் கெனமன் ஆகியோர் சங்கக் கடைகள் நடத்தப்படும் முறைகள் பற்றி கண்டித்துப் பேசியபின் திரு சிவபாலன் பேசுகையில் சங்கக் கடை நடை முறைகள் பிழையாக இருப்பதாகவும் தமது பகுதியில் உள்ள சங்கக் கடை அதிகாரிகள் பற்றி தனமும் குறைகள் கூறப்படுகின்றனவென்றும் இவற்றுக்கு வெளியிடங்களில் இருந்தே வேலையாட்களும் உதியோகத்தரும் எடுக்கப்படுகின்றனரேயன்றி சொந்த இடத்து ஆட்களுக்கு வேலைகள் கொடுக்கப்படுவதில்லையென்றும் இந்த முறையை மேலும் தொடர்ந்திருக்க அனுமதிக்கப்படாதென்றும் கூறினர்.

திரு சாம சில்வா பேசுகையில் தற்காலிகமாக உள்ள சங்கக் கடைகள் சப்-இன்ஸ்பெக்டர்களை நிரந்தரமாக எடுக்க வேண்டுமென்று கூறினர்.

இந்த உதியோகத்தர்கள் சங்கக் கடைகளால் எடுக்கப்பட்டவர்கள் என்றும் அவர்களுடைய சம்பளக்களுக்கு சங்கக் கடைகள் பணம் அளிப்பதாகவும் பிரதம மந்திரி திரு டி எஸ் சேனாநாயகா கூறினர்.

திரு சாம சில்வா பேசுகையில் இம்முறை பிழையானதென்றும் அவர்களை அரசாங்க சேவையில் நிரந்தரமாக எடுக்க வேண்டுமென்றும், மொத்த விற்பனை கூட்டுறவு ஸ்தாபனங்கள் மற்ற சங்கக் கடைகள் விருமபாத பொருள்களை எடுக்க அவற்றை சங்கக் கடைகள்மீது சுமத்திவிடுவதால் சங்கக் கடைகளுக்கு நஷ்டமேற்படுவதாகவும் மந்திரி இவற்றைக் கவனிக்க வேண்டுமென்றும் கூறினர்.

திரு பீட்டர் கெனமன் பேசுகையில் சங்கக் கடைகளில் உள்ள பொருள்களின் நஷ்டங்களைத் தவிர்ப்பதற்கு ஒரு இன்ஷூரன்ஸ் திட்டத்தை தயாரிக்குமபடி ஆலோசனை கூறினர்.

தனிப்பட்ட முதலாளிகளின் ஆதிக்கத்திலிருந்து தேச மக்களைக் காப்பாற்றுவதற்கு சங்கக் கடைகளை திருத்தமான திட்டத்தின் மீது அமைக்கும்படி திரு ஏ. ஆர். எம். அபூபக்கர் கூறினர்.

உணவு மந்திரி திரு ஏ. ரத்னாயகா பதிலளிக்கையில் தீப்பெட்டிகள் விலையேற்றமாக விற்கப்படுவது பற்றி சரியான அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டுமென்றும், சங்கக் கடை இன்ஸ்பெக்டர்கள் அரசாங்க உதியோகஸ்தர்களுக்குரிய சலுகைகளைப் பெற்றுள்ளனரென்றும் நிலைமை பழையபடி திரும்பும்வரை இன்னும் சில காலத்துக்கு இந்த இயக்கம் இருக்குமென்றும் கூறினர்.

சில சங்கக் கடைகளில் ஏழை மக்களைக்கொள்ளையடித்து அங்குள்ள பொருள்களை சிலர் கையாடும் வேலைகள்நடப்பதாக திரு வி. குமாரசாமி குறிப்பிட்டார்.

திரு கீர்த்திரத்ன பேசுகையில் இந்த இலாகாவால் வாங்கப்படும் பொருள்கள் பற்றியும் தனிப்பட்ட வர்த்தகர்கள் பற்றியும் சங்கக் கடைகளில் மோசடிகள் நடக்கும்போது மந்திரி சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கூறினர்.

திரு கே. கனகரத்தினம் பேசுகையில்சங்கக்கடைகளின் கணக்குகளைப் பரிசோதிப்பவர்கள் இப்பொழுது வாங்கும் சம்பளப் பணம் குறைக்கப்பட வேண்டுமென்று கூறினர். கணக்குப் பரிசோதகர்கள் அதிக பணம் சம்பாதிப்பதாக திரு வன்னியசிங்கம் குறிப்பிட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

கொழும்பு கடை வீதிகளெங்கும் ஜனக் கூட்டம்

நடைபாதை அங்காடிகளால் பொது மக்களுக்குக் கஷ்டங்கள்

கொழும்பு, டிச. 23

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு கொழும்பு நகரத்தின் கடைவீதிகளெங்கும் ஜனக் கூட்டங்கள் அதிகமாக இருந்தன. நாட்டுப் புறங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் பொருள்கள் வாங்குவதற்கு நகருக்கு வந்திருந்தனர். கடைகளில் எங்கும் ஜனக்கூட்டம் தான் காணப்பட்டது. நடைபாதைகள் எங்கும் ஜவுளிக் கடைகள், மற்றும் பழவகைக் கடைகள், விளையாட்டுச் சாமான்கள் முதலியன சிறுசிறு வியாபாரிகளால் வைக்கப்பட்டிருந்தன.

நடைபாதைகளில் மக்கள் போக்குவரத்து செய்யவே அன்றி கடைகளுக்குள்ளே சென்று தங்களுக்குத்தேவையான பொருட்களை வாங்குவதற்கோ முடியாது. நடைபாதை முழுவதும் ஆக்கிரமிக்கப்பட்டுக் கிடக்கின்றன. சில இடங்களில் நடை பாதைகள் மட்டுமல்லாது வீதிகளும் கூட நடைபாதைக் கடைகள் விசாலித்துவிட்டன. இந்த விதமாக வீதிகளை ஆக்கிரமித்துள்ள சில அங்காடிகள் போக்குவரத்து வாகனங்களால் நேற்று மோதுண்டு சேதமுமடைந்துள்ளன. போலிஸாரும் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து இந்த அங்காடிகளை நடைபாதையிலேயே வைக்கும்படி சில்லறை வர்த்தகர்களிடம் கூறுகின்றனர்.

ஜவுளி வகைகள் இந்த அங்காடிகளில் வெகுவாக குறைந்த விலைக்கெல்லாம் கிடைக்கின்றன. துணிகளில் அடையாளம் இடப்பட்ட விலைகளிலிருந்து ரூபா 1 முதல் ரூபா 2 வரைகூட விலைகள் குறைத்து விற்கப்படுகின்றன.

குழந்தைகள் விளையாட்டுப் பொருள்களும் வெடி வகைகளும்தான் நேற்று அதிகமாக காணப்பட்டன. வெடிக்கலை வீதிகளில் கொளுத்தப்படாதென்று போலிஸார் தடை செய்துள்ளனர்.

மற்றும் வீட்டுத் தளபாட பொருள்கள், அலுமினிய பாத்திர வகைகள் முதலியனவும் குறைவான விலையில் நேற்று விற்கப்பட்டன.

மாடு வண்டிகளில் ஜனக் கூட்டம் சொல்லி முடியாது. ஜப்பிக்காரரும் அதிகமாக ராமகளிலும் நடைபாதைகளிலும் உலாவுகின்றனர் என போலிஸ் உதியோகத்தர் ஒருவர் கூறினர். இந்த ஜன நெருக்கடியை அவர்கள் பயன்படுத்துவதாக கூறப்படுகிறது. வீதிகளில் மேட்டார் முதலி போக்குவரத்தும் மிக அதிகமாக இருந்தது. புறக்கோட்டையில் நேற்று பெண்மணிகளே அதிகமாக காணப்பட்டனர். கோட்டைப் பகுதியிலும் அதிக ஜனக்கூட்டம் இருந்தது.

மெயின் வீதி, இரண்டாம் மூன்றாம் குறுக்குத்தெரு வர்த்தகர்கள் முக்கியமாக தங்களுடைய வாத்தகங்கள் பாதிக்கப்படுவதாக குறைகள் கூறுகின்றனர்.

நேஷனல் லொசிஞ்சர், பிஸ்கெற்

நல்ல அனுபவம் வாய்ந்தவர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பெற்ற
லொசிஞ்சர்களும், பிஸ்கெற்றுகளும்
பாலர் முதல் வயோதிபர் வரை விரும்புவது
நேஷனல் லொசிஞ்சர்களும், பிஸகெற்றுகளுமே.
மொத்தமாகவும் சில்லறையாகவும்
குறைந்த விலைக்கு எங்கும் கிடைக்கும்.
ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்!
நேஷனல் கொன்பெக்ஷனரி கம்பெனி,
489, பேலிய கொட, கழனியா.
டெலிபோன்: கழனியா 35.

இந்தியன் பாங்க் லிமிட்டெட்.,
(இந்தியாவில் இணைக்கப்பெற்றது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பெற்றது.)

1907ல் ஸ்தாபிக்கப்பட்டது.

		ரூ.
அதிகாரம் பெற்ற மூலதனம்	... ...	1,00,00,000
வசூலான மூலதனம்	... ...	72,00,000
அழைத்து செலுத்தப்பட்ட மூலதனம் 30-6-47 வரை	...	52,91,936
சேமிப்பு நிதி	... ...	62,00,000
டிப்பாசிட்டுகள் (19 கோடியே 40 லட்சத்திற்கு மேல்)		19,41,01,857

தலைமைக்காரியாலயம்: வடக்கு பீச்ரோடு, மதராஸ்.

மதராஸ் காரியாலயங்கள்:
எக்மோர், எல்பின்ஸ்டன் மௌண்ட் ரோட், மைலாப்பூர், புரசவாக்கம், நியாகராயநகர், ட்ரிப்ளிகேன்.

கிளைகளும், சப் காரியாலயங்களும்:
ஆல்வாய், ஆலப்புழை, பங்களூர் கன்டோன்மெண்ட், பங்களூர் சிட்டி, பெஜவாடா, பீமாவரம், பம்பாய், கல்லிக்கோட்டை, கன்னூர், கொச்சி, கொயம்புத்தூர், தேவகோட்டை, தேவக்கோட்டை, திண்டுக்கல், எர்ணாகுளம், ஈரோடு, கவர்னர்பட், குடிவாடா, குண்டூர், குண்டூர் பஜார், காரைக்குடி, வேலூர், கோவில்பட்டி, கோட்டயம், கும்பகோணம், மதுரை, மங்களூர், மைசூர், நாகர்கோவில், நாகப்பட்டணம், நார்சாரோபேட், பாலக்கோல், பாலக்காடு, பன்னத்தூர், பொள்ளாச்சி, புதுக்கோட்டை, புதுப்பட்டி, கொல்லம், ராஜமுந்திரி, ரெப்பாலி, சேலம், சீர்காழி, வெங்கல், தடபெல்லுடம், தஞ்சாவூர், தலைஞாயிறு, தென்னாலி, திருவெல்வேலி, திருவெல்வேலி டவுன், திருப்பூர், திருவாரூர், திருச்சூர், திருச்செங்கோடு, திருவனந்தபுரம், தூத்துக்குடி, வேலூர், விருதுநகர்.

வெளிநாட்டு ஏஜண்டுகள்:
நேஷனல் ஸிட்டி பாங்க் ஆப் நியூயார்க், லண்டனிலும், நியூயார்க்கிலும்.

கொழும்பு காரியாலயம்:
14, பெயிலி வீதி, கோட்டை, கொழும்பு 1. போன்: 3402

மலாயா, சிங்கப்பூர், கோலாலம்பூர், பினாங்கு.

வட்டி வீதம், கணக்கு, சேமிப்பு கணக்கு, குறித்தகால, விசேஷகால டிப்பாசிட் கணக்கு முதலியவை நிர்ணயிக்கப்பட்டு வட்டி வழங்கப்படுகிறது.
ட்ரப்ட்கள், டி. டி. கள் சீரியமான விதிகளில் வழங்கப்படுகிறது.
சகல வகை வர்த்தகொழில்கள் நடாத்தப்படுகிறது—விதிகள் விண்ணப்பித்து பெறலாம்.

ஏஜண்ட் எஸ். கிருஷ்ணமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

கொழும்பு முனிசிபல் எல்லைக்குள் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் 'சுதந்திரன்' பத்திரிகை ஆண்டுமுழுவதும் தவறாமல் கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறபடியால் தேவையானோர் கீழ்க்கண்ட விலை சந்தாவுக்கு மனுச்செய்யவும்.

சந்தா பின்வருமாறு:-

1 மாதம்	ரூ. 2-00
3 மாதம்	ரூ. 6-00
6 மாதம்	ரூ. 12-00
12 மாதம்	ரூ. 24-00

மானேஜர்,
'சுதந்திரன்',
கொழும்பு.

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

194 ஏ, நட்டாந் ரோடு, கொழும்பு.
போன்: 3411.

சர்வசித்த ஜெ மார்கழி மீ 9உ
புதன்கிழமை

சங்கக்கடைகளின் சீர் கேடு

யுத்தகாலத்தில் உணவுக் கஷ்டத்தைச் சமாளிக்க அரசாங்கம் உணவுக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியது. உணவுப் பொருள்கள் கட்டுப்படுத்தப்பட்டவுடன் கொள்ளை இலாபக்காரர்களும், கள்ளமார்க்கெட் காரர்களும் அகப்பட்டதைச் சுருட்டினார்கள். இதற்கு முற்றுப்புள்ளிவைக்க ஐக்கிய பண்டசாலைகள் நாடெங்கும் ஸ்தாபிக்கப்பட்டன. ஐக்கிய பண்டசாலைகளே பிரதான உணவுப் பொருள்களை விநியோகம் செய்தது. பண்டசாலைகள் பொருள்கள் வாங்கப் பண உதவியும் செய்தது அரசாங்கம், என்றாலும் எந்தக் காரணத்தையிட்டு இப்பண்டசாலைகள் உண்டாக்கப்பட்டனவோ, அவற்றைச் செய்ய முடிந்ததாக நாம் இன்று கூற முடியாது. காரணம்? யுத்தம் முடிவடைவதற்கு முன்பதாகவே இப்பண்டசாலைகள் மீது பலபுகார்கள் கூறப்பட்டன. ஆனால் ஒன்றிரண்டு நல்ல பண்டசாலைகளும் நாட்டில் இருக்கத்தான் செய்கின்றன.

ஆனால் பொதுவாக இப்பண்டசாலைகளில் சீர் கேடான நிலைமைதான் இன்று காட்சி அளிக்கின்றது. பொருள்கள் வாங்குபவர்கள் ஒரு நாள் முழுவதும் வரிசையில் நின்று காத்திருக்க வேண்டியிருக்கின்றதாம். ஏழைகளுக்கு சில பொருள்கள் கிடையாது. உதாரணமாக, வெள்ளைச் சீனி வந்தால் அவை ஒன்றில் கள்ளமார்க்கெட்டுக்கு அனுப்பப்பட்டு விடுகின்றதாம், அல்லது சங்க நிர்வாகஸ்தர்களே பங்கிட்டுக் கொள்ளுகின்றனராம். சில சங்கக் கடைகளில் பொருள்கள் இராப்பொழுதில் மாயமாக மறைந்து விடுகின்றன. அதையிட்டுப் போலீஸார் சில நாட்களுக்குப் புலன் விசாரிப்பர். அதன் பின்பு ஒன்றுமே நடவடிக்கைகள் எடுக்கப்படமாட்டா. இன்னும் சங்க நிர்வாகிகள் பொதுமக்களுடன் நடந்து கொள்ளும் முறையும் செவ்விதாக இல்லை.

யுத்தம் முடிந்துவிட்டது இச் சங்கக் கடைகள் மீது பொது மக்களுக்கு வெறுப்புத் தோன்றிவிட்டது. அத்துடன் அரசாங்கப் பணமும் ஏராளம் இவற்றால் செலவாகிவிட்டன சங்கக் கடையில் வாங்கும் பொருட்கள் பொதுவாக நல்லவைம் என்று கூறமுடியாது சில பண்டசாலைகள் நஷ்டமடைந்து மூடப்பட்டும் வருகின்றன ஒரு வருடத்திற்கு முன்பு 5000 பண்டசாலைகள் வரையில் இலங்கையில் இருந்தன. ஆனால் இன்று அத்தொகை அரைவாசிக்கு மேல் குறைந்திருக்கக்கூடும் என்று நாம் திடமாகக் கூறமுடியும்.

இந்த நிலைமையில் இன்னும் இப் பண்டசாலைகளை அரசாங்கச் செலவில் வைத்திருக்க விரும்புவது புத்தியின்பாற்பட்டதல்ல. அவைகள் தாமாக பொருள்களை வாங்கி விற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லாவிட்டால் மூடிவிடுவதுதான் உத்தமம். மழை வெள்ளத்தால் விழுந்து போகும் சுவரை மூண்டு கொடுத்து நிறுத்தி வைக்க முடியாது. ஒன்றில் அதை விழவிடவேண்டும், அல்லது புதிதாகக் கட்டவேண்டும். இரண்டுங்கெட்டான் நிலைமை வேண்டாம்.

கொட்டாஞ்சேனை கொலைவழக்கு

காலஞ்சென்றவரின் 9 வயதுப் புதல்வன் சாட்சியமளித்தான்

கொழும்பு, டிச. 23

கொட்டாஞ்சேனை காலேஜ் வீதிக் கொலைவழக்கு நேற்றுத் தொடர்ந்து விசாரிக்கப்பட்டது. இவ்வழக்கில் செனிவரத்ன என்பவர் கொலை சம்பந்தமாக கே. எ. தர்மசேன, காலஞ்சென்றவர் மனைவி பீட்ரிஸ மாட் செனிவரத்ன ஆகிய இருவர் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

நேற்று சட்ட வைத்திய அதிகாரி, ஜோன் சிங்கோ என்னும் நுகயகொடைக் கடைக்காரர், உக்கு மெனிக்கா என்னும் பணிப்பெண், காலஞ்சென்றவரின் ஒன்பது வயதுக்குமாரர், காலஞ்சென்றவருக்குக் கடன் கொடுத்த மூன்று ஆப்கானியர்கள் ஆகியோர் சாட்சியம் அளித்தனர்

இதன் எஞ்சிய விசாரணை இன்று தொடரும்.

கிராமச் சங்கத் தலைவர் மீது வழக்கு

யாழ்ப்பாணம், டிச. 22

அளவெட்டி ஆஸ்பத்திரியின் அப்போதிக்கரி வஸ்தியாம்பிள்ளையும் மல்லாகம் கிராமச் சங்கத் தலைவர் வைத்தியலிங்கமும் இணுவில் ஆஸ்பத்திரியில் வேலையிலும் சிவபாக்கியம் என்னும் பெண்ணைத் தூண்டி தாலும் இன்னும் சிலரும் அவளைத் தொந்தரவு செய்தார்களென அவள் போலிசாருக்கு பொய் முறைப்பாடு செய்ய உடந்தையாயிருந்தார்கள் எனக் குற்றம்சாட்டி அளவெட்டி வாசியாகிய கே. செல்வநாயகம் என்பவர் மல்லாகம் கோர்ட்டில் அவ்விருவருக்கும் எதிராக ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கின்றார்.

20 வயதுள்ள சிவபாக்கியம் சாட்சியம் கூறும்போது தான் அரிசிக் கூப்பன் புஸ்தகம் எடுக்க இணுவில் ஆஸ்பத்திரியிலிருந்து தான் முன்னர் வேலையாயிருந்து அளவெட்டி பிரசவ விடுதிக்குப் போகும் வழியில் மல்லாகம் சங்கானை ரோட்டில் தம்பிராசா என்பவர் தன்னைப் பலாத்காரப்படுத்தியதாகவும் தான் விடு விடுதக்கொண்டு ரோட்டுக்கு ஓடிவிட்டதாகவும் மறு நாள் அப்போதிக்கரியும் கிராமச் சங்கத் தலைவரும் இணுவிலுக்கு வந்து யாழ்ப்பாணம் போலிசுக்கு அழைத்துக் கொண்டு போகும் வழியில் செல்வநாயகம் என்பவரின் பெயரையும் சேர்த்து முறைப்பாடு செய்யும்படி தூண்டியதாயும் தான் அவர்கள் தூண்டுதலின் பேரில் செல்வநாயகத்தை வீணுகச் சேர்த்து முறையிட்டதாகவும் செல்வநாயகம் இதைப் பற்றியொன்றும் அறியமாட்டார் என்றும் கூறினாள்.

எதிரிகள் தலா ரூபா 150 பிணையில்விடப்பட்டு விசாரணை ஜனவரி 2-ந் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ந-நி)

அரிசிகடத்தியமைக்கு ரூபாய் 100 அபராதம்

மட்டக்களப்பு, டிச. 23

89 கொத்து அரிசியை உத்தரவின்றிக் கடத்தியதாக புளியங்கூடவைச் சேர்ந்த ராஜேந்திரப் என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கில் எதிரி தாம் குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டார். அதன்பேரில் அவர் மீது ரூபாய் 100 அபராதம் விதிக்கப்பட்டது.

கிரீஸ மன்னரின் சுகயீனம்

ஏதென்ஸ், டிச. 22

கிரீஸின் போல் மன்னருக்கு சுரம் கண்டிருப்பதால் பிரபல பிரஞ்ச டாக்டரான மொலாறெற் என்பவரும் ஜெர்மன் டாக்டரான ஸரேபரும் ஏதென்ஸ் நகருக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர். சென்ற நவம்பர் மாதத்திலும் நெருப்புச் சுரம் பிடித்திருந்தமையால் அவர் எலிஸபெத் இளவரசியும் எடின்பரோ பிரபுவும் திருமணஞ் செய்த வைபவத்திற்குப் போகமுடியாமலிருந்தது.

இந்தியாவுக்கு இந்தியர் பிரதம தளபதி ஆகிறார்

காஷ்மீர் பற்றி இந்தியா-பாகிஸதான் பிரதம மந்திரிகள் சம்பாஷணை

இந்தியாவின் நிலைமையை ஜனாதிபதி ட்ரூமனுக்கு ஸ்தானிகர் கீராடி எடுத்துச் சொன்னார்

இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு இலங்கையைப்பற்றி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை

சுதந்திர பர்மா-அமெரிக்கா கல்வி ஒப்பந்தம்

புதுடில்லி, டிச. 22

அடுத்த ஏப்ரல் முதல் தேதியிலிருந்து இந்தியாவின் ராணுவத்திற்கு இந்தியரே பிரதம தளபதியாக இருப்பார். இன்று பத்திரிகா நிருபர்கள் மகாநாட்டில் இந்தியாவின் பாதுகாப்பு மந்திரி சர்தார் பலதேவ் சிங் பின்வருமாறு தெரிவித்தார்:-

இப்பொழுது இந்தியாவின் பிரதம தளபதியாக இருக்கும் ஜெனரல் சர் ராப் லோக்கார்ட் தேக நிலையை முன்னிட்டு ஜனவரி மாதம் முதல் தேதி தனது பதவியிலிருந்து விலகிக் கொள்வார். அப்பதவியில் ஜனவரி முதல் தேதி முதல் மார்ச் 31-ம் தேதி வரை இப்பொழுது இந்திய ராணுவ சபைத் தலைவராக இருக்கும் லெப்டினன்ட் ஜெனரல் எல் ஆர் புச்சர் இந்தியாவின் பிரதம தளபதியாக நியமிக்கப்பட்டிருப்பார். ஏப்ரல் முதல் தேதியிலிருந்து இந்தியரே இந்தியாவின் பிரதம தளபதியாக நியமிக்கப்படுவார். திரு. புச்சர் பிரதம ஆலோசகராக நியமிக்கப்படுவார். அவருடன் இப்பொழுதுள்ள பிரிட்டிஷ் ஆலோசகர்களுமிருப்பர் இந்த ஆலோசகர்களுக்குப் பதில் இந்திய ஆலோசகர்கள் நியமிப்பதுபற்றி தேதி குறிப்பிடப்படவில்லை. ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நமது ராணுவம் முற்றிலும் இந்திய அதிகாரிகளின் கீழிருக்கும். நிபுணர்கள் தேவைப்படும்போது பிரிட்டிஷ் நிபுணர்கள் அகப்படாவிடில் அமெரிக்க நிபுணர்கள் தருவிக்கப்படுவார்கள். சமாதான காலத்தில் ராணுவம் இருக்க வேண்டிய எண்ணிக்கை அளவு இன்னும் நிச்சயிக்கப்படவில்லை ஆனால் இப்பொழுது பிரிவினைக்குப் பின் இந்தியாவுக்குள்ள ராணுவத்தின் தொகை அப்படியே இருந்து வரும். இந்திய ராணுவத்துறைக்கும் சமஸ்தானத்துறைக்குமுள்ள தொடர்பு, புதிய ராணுவ அமைப்புத் திட்டம் உருவாகும் வரை இப்பொழுதுள்ளபடியே இருக்கும்.

கடற்படை

இந்தியாவின் கடற்படையை நவீன யந்திர சாதன முறையில் அபிவிருத்தி செய்ய இந்திய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது புதிய ரக யுத்தக் கப்பல்களை இந்தியா சேகரித்து வருகிறது. இதற்கு முன் இப்படிப்பட்ட யுத்தக் கப்பலகள் இந்தியாவுக்கு இருந்ததில்லை இந்தியாவில் புதிய கடற்படைப் பயிற்சிக் கல்லூரிகளை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது பிரிட்டனில் கடற்படைப் பயிற்சி பெறுவதற்காக செவ்வாய்க்கிழமையன்று இரு இந்திய யுத்தக் கப்பல்களில் அறுநூறு எழுநூறு அதிகாரிகளும் கடற்படை வீரர்களும் பிரிட்டனுக்குப் பயணமாகிறார்கள். ஜூன் மாதத்திற்குள் பயிற்சி பெற்று திரும்புவார்கள்.

இந்திய மயமாகும்

ஜனவரி முதல் தேதிக்குள் எல்லா இந்தியப் படைகளுக்கும் இந்தியர்களே தளகர்த்தர்களாக நியமிக்கப்பட்டுவிடுவார்கள். இந்தியா பிரிக்கப்படுவதற்கு முன் இந்திய ராணுவத்தில் பதினாயிரம் பிரிட்டிஷ் அதிகாரிகள் இருந்தார்கள். ஆகஸ்ட் 15-ந் தேதி இந்தியா பிரிக்கப்பட்டு சுதந்திரமடைந்த போது இந்திய யூனியன் ராணுவத்தில் 1200 பேர்களுக்குமேல பிரிட்டிஷ் அதிகாரிகள இருந்தனர். ஜனவரி முதல் தேதி முதல் 800 பேர்களுக்கும் குறைவான பிரிட்டிஷ் அதிகாரிகளே இருப்பர். ஜனவரி முதல் தேதிக்குப் பின் நூற்றுக்கு 10 சதவிகிதமிருந்த பிரிட்டிஷ் கமாண்டர்களின் தொகை நூற்றுக்கு 5 சதவீதமாகக் குறைக்கப்படும். ஏப்ரல் முதல் தேதி முதல் எல்லா கமாண்டர்களும் இந்தியர்களாக இருப்பர். ஏப்ரல் முதல் தேதி முதல் நமது ராணுவம் முழுவதும் இந்திய மயமாகிவிடும். சுதந்திர இந்தியாவின் அந்தஸ்துக்கேற்ப பலமாக இந்திய மயமான ராணுவத்தை நிறுவ இந்திய அரசாங்கம் முனைந்திருக்கிறது. ஆதலால் இந்திய ராணுவ அதிகாரிகள் புதிய பொறுப்புகளை வகித்து முன்போல தங்கள் திறமையை உலகுக்கு நிரூபித்துக் காட்டுவதுடன் இந்நாட்டின் பொறுப்பை இந்நாட்டு மக்களால் திறம்பட வகிக்க முடியுமென்பதையும் நிரூபித்துக் காட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

இலங்கை-இந்தியா உறவு

சென்னை, டிச 22

சென்ற வருடம் இலங்கையில் சுற்றுப்பிரயாணம் செய்து இலங்கையிலுள்ள நிலைமையை ஆராய்ந்து வந்த திரு பி ஆர். ராமச்சந்திர ராவ் இலங்கை-இந்திய பிரச்னைபற்றி அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்:-

இயற்கை நிலைப்படி இந்து மகா சமுத்திரப் பாதுகாப்புக்கு தலைமை வகிக்க இந்தியாவே அருகதையுடையது. ஆசியாவிலுள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மறைந்து சுதந்திர ஆசிய நாடுகள் தோன்றுவதால் இந்து மகா சமுத்திரப் பாதுகாப்பு பொறுப்பு இந்தியாவைச் சார்ந்ததாகும். இந்தியாவுடன் இலங்கை, பர்மா, மலேயா கூட்டுப் பாதுகாப்பு முறை ஏற்படுத்திக்கொள்வதுதான் புதிய நிலைமைக்கு ஏற்ற முறையாகும். ஆகவே இந்த கூட்டுப் பாதுகாப்பு முறை உருவாக்கப்பட வேண்டுமென்பதை மனதில் கொண்டு இலங்கை-இந்தியா பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வதே சிறந்த மார்க்கமாகும்.

காஷ்மீர் பிரச்னை

புதுடில்லி, டிச. 22

இன்று மாலை இந்தியா பிரதம மந்திரி பண்டித நேருவும் பாகிஸ்தான் பிரதம மந்திரியாகத அலிகானும் காஷ்மீர் பிரச்னைபற்றி இரண்டு மணி நேரம் விவாதித்தனர். சம்பாஷணை முடிவு தெரியவில்லை. நாளை காலை பாகிஸதான் பிரதமர் கராச்சிக்குத் திரும்புகிறார். அடுத்த சில தினங்களில் காஷ்மீரில் நிலைமை மாறும் என்று தெரிகிறது. காஷ்மீர் நிர்வாகத் தலைவர் ஷேக் அப்துல்லா ஏற்கெனவே இங்கு வந்து இந்திய அரசாங்கத்துடன் சம்பாஷணை நடத்திச் சென்றார்.

காஷ்மீரத்தின் பாதுகாப்பு திருப்திகரமாக இருக்கிறது. எதிரிகள் பாகிஸ்தான உதவியுடன் பாகிஸதான் பிரதேசத்திலிருந்து படையெடுத்து வருவதுபற்றி இந்திய அரசாங்கமும் காஷ்மீர் அரசாங்கமும் கடுமையான கருத்துக்கொண்டிருக்கின்றன. பாகிஸ்தான் பிரதமர் செய்த ரேடியோ பிரசங்கம் அண்டை நாடுகள் சம்பந்தமாகவுள்ள சர்வதேசச் சட்டத்திற்கு விரோதமானதென்றும் அவைகள் கருதுகின்றன.

ஜப்பான் வலுவாகச் சண்டைக்கிழுக்கப்பட்டது

டோஜோவின் கூற்று

டோக்கியோ, டிச 22

யுத்தகாலத்தில் ஜப்பானிய பிரதம மந்திரியாகவிருந்த டோஜோ யுத்தத்தை மூட்டியதாகவும் யுத்தகாலத்தில் யுத்தக் கைதிகளை வதைசெய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

தாங்கள் யுத்தத்தில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தத்தைஅமெரிக்கா ஏற்கனவே அறிந்திருந்ததென்றும், பிரிட்டனுடன் சேர்ந்து 1941 நவம்பரில் பேர்ல் ஹார்பரை ஜப்பான் தாக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது அவர்களுடையதேட்டமென்றும் கூறினார். (ராய்ட்டர்)

அரசரின் கிறிஸமஸ விடுதலை

சண்ட்றிங்காமில் கழிப்பார்

லண்டன், டிச. 22

தமது கிறிஸ்மஸ விடுதலை நாட்களை கழிப்பதற்காக அரசரும் இராணியும் தமது குடும்பத்தினரோடு நோர்போக்கிலுள்ள சண்ட்றிங்காம் மாளிகைக்கு இன்று பயணமானார்கள்.

எலிஸபெத் இளவரசியும் எடின்பரோ கோமகனும் அவர்களுடன் சென்றனர். (ராய்ட்டர்)

சிரியாவில் காலரா

கெய்ரோ, டிச. 22

சிரியாவில் காலரா பரவியிருக்கிறது. அதைத் தடுக்க உதவிசெய்யும்படி எகிப்து மன்னர் தனது சுகாதார மந்திரிக்கு கட்டளையிட்டிருக்கிறார். பத்து லட்சம் காலரா மருந்து புட்டிகளுடன் எகிப்திய விமானம் சிரியா சென்றது. எகிப்தில் செப்டம்பர் 28-ந் தேதி முதல் டிசம்பர் ஆரம்பம் வரை காலராவால் பதினாயிரம் பேர்கள் மாண்டனர்.

சிரியாவில் காலரா பரவியிருப்பதால் ஈராக், சிரியா, லெபானன், டிரான்ஸ்ஜோர்டான், பாலஸ்தீனம் இவைகளுக்கிடையேயுள்ள எல்லைப்புறங்கள் மூடப்பட்டன.

பத்திரிகா நிருபர்கள் அடைபட்டனர்

லேக்ஸக்ஸஸ், டிச. 22

அமெரிக்க அதிகாரிகளால் ஒரு கிரீக பத்திரிகா நிருபர் பிடித்தடைபட்ட சில மணித்தியாலங்களுக்குப்பின் செயிட் ஹசான் என்னும் இந்திய பத்திரிகா நிருபரும் பிடித்தடைபட்டார்.

கிரேக்க நிருபர் டல கமியூனிஸ்ட் பத்திரிகைகளுக்கு நிருபரென்றும், ஹசான் அரசியல் தலையீட்டினால் மூடப்பட்ட பாம்பேயிலுள்ள "பீப்பிள்ஸ் ஏஜ்" என்னும் பத்திரிகையின் நிருபரென்றும் அறியப்படுகிறது. [ராய்ட்டர்]

பாப்பாண்டவரின் சுகயீனம்

ரோம், டிச. 22

பரிசுத்த பாப்பாண்டவருக்கு ஜலதோஷம் பிடித்திருப்பதால் அவர் இரண்டாவது நாளாக ஒருவருக்கும் பேட்டியளிக்கவில்லை.

கிறிஸ்மஸ் கிரியைகளை நடத்துவதற்காக அவர் தமது உடலைப் பேணவேண்டியிருக்கிறது. [ராய்ட்டர்]

ரயில் விபத்தில் 15 பேர் மரணம்

பிராங்போர்ட், டிச. 22

பிரேஷியாவிலுள்ள நியூவில்குக்கு அண்மையிலிருக்கும் சாட்டிலிச் என்னுமிடத்தில் இரு எக்ஸ்பிரஸ ரயில்கள் மோதியமையால் 15 பேர் மடிந்து பலர் காயமடைந்தனர். [ராய்ட்டர்]

பம்பாயின் புதிய கவர்னர்

ஸர். மகாராஜா சிங் நியமனம்

புதுடில்லி, டிச. 22

இப்பொழுதிருக்கும் பம்பாய் கவர்னர் ஸர். ஜான் காலவிலே ஜனவரி 6-ம் தேதி தனது பதவியைக் காலிசெய்துவிட்டு இங்கிலாந்து போகிறார். ஸர் மகாராஜா சிங் பம்பாயின் புதிய கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

காஷ்மீர் பிரச்னை ஐக்கிய தேச பாதுகாப்பு கவுன்ஸிலின் தவனத்திற்குக்கொண்டு வரப்படுமென்று அரசியல் வட்டாரத்தில் அபிப்பிராயம் ஏற்பட்டு வருகிறது.

கூட்டுப் பாதுகாப்பு சபை

இன்று அரசாங்க மாளிகையில் இந்தியா-பாகிஸதான் கூட்டுப் பாதுகாப்பு சபைக் கூட்டம் நடைபெற்றது இந்தியா கவர்னர் ஜெனரல் ராஜாஜி மவுண்ட்பேட்டன், இந்தியா பாதுகாப்பு மந்திரி ஸர் தார் பலதேவ் சிங், இந்தியா பிரதம மந்திரி பண்டித நேரு, இந்தியா பிரதம தளபதி ஜெனரல் ஸர். ராபலோக்கார்ட, பாகிஸதான் பிரதம மந்திரி லியாகத் அலிகான் பாகிஸதான பிரதம தளபதி ஜெனரல ஸர். பிராங்க்மெசர்வி ஆகியோர் விஜயம் செய்திருந்தனர்.

காஷ்மீர் போர்

பூஞ்ச் பிரதேசத்தில் குன்றுகளிலிருந்த எதிரிகளை இந்திய துருப்புகள் விரட்டி விட்டன இவகு 100 எதிரிகள் கொல்லப்பட்டார்கள். ஜங்கர் பிரதேசத்திலுள்ள கிராமங்களிலிருந்த எதிரிகளையும் விரட்டினர். 40 எதிரிகள் கொல்லப்பட்டார்கள்.

பிரிட்டிஷ் வைத்திய நிபுணர்கள் வருகை

லண்டன், டிச. 22

இந்தியா-பாகிஸதான் அகதிகள் கஷ்ட நிவாரணத்திற்காக பிரிட்டிஷ் செஞ்சிலுவை சங்கத்தார் மேஜர் ஜெனரல் தாம்சன் நிவாரண கமிஷனராக நியமித்திருக்கின்றனர் இரச்சங்கம் ஏற்படுத்தும் அகதிகள் கஷ்ட நிவாரண ஆஸ்பத்திரியில் வேலை செய்ய பிரிட்டிஷ் வைத்திய நிபுணர்கள் காராச்சிக்குப் புறப்படுவார்கள்.

இந்தியர்பற்றி ட்ரூமனுக்கு அறிக்கை

நியூயார்க், டிச. 23

இந்தியாவில் அமெரிக்க ஸ்தானிகராக இருக்கும் டாக்டர் ஹென்ரி கிராடி அமெரிக்கா திரும்பி வந்து இந்தியாவின் நிலைமையைபற்றி ஜனாதிபதி ட்ரூமனிடம் பின்வருமாறு அறிவித்தார்:- இப்பொழுது பொருளாதாரத் திட்டங்களை நடத்திச்செல்ல இந்தியா தயாராகிவிட்டது. இந்தியாவில் வகுப்புக் கலகம் ஓய்ந்துவிட்டது இனி இந்தியா கைத்தொழிலில் முன்னேற்றமடையும்.

ஜனவரி 13-ம் தேதி டாக்டர் கிராடி இந்தியா திரும்பும் மாக்கத்தில் லண்டனில் தங்கச் செல்வார்.

கோதுமை

பெர்த், டிச. 22

பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் பத்தரைக் கோடி புஷல் கோதுமை ஏற்றுமதி செய்வதற்கு செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் சம்பந்தமாக ஆஸ்திரேலிய அரசாங்கத்திற்கும் ஆஸ்திரேலிய கோதுமை உற்பத்தியாளர் சபைக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கிறது.

பர்மா-அமெரிக்கா கல்வி ஒப்பந்தம்

வாஷிங்டன், டிச. 22

சுதந்திர பர்மா முதன்முதலாக அமெரிக்காவுடன் கல்வி ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. அமெரிக்க சர்வகலாசாலைகளில் பர்மிய மாணவர்கள் கல்வி பயில 2 லட்சம் டாலர் திட்டம் ஆரம்பிக்கப்படும். அமெரிக்க மாணவர்கள் பர்மாவில் கல்வி பயில 50 லட்சம் டாலர் திட்டம் ஆரம்பிக்கப்படும்.

கிராம விதானை பொய்க் கை எழுத்திட்டாராம்

3 மாத கடுங்காவல் தண்டனை

மட்டக்களப்பு, டிச. 23

காத்தான்குடி 5-ம் வட்டார விதானை மீரா லெப்பை ஆதம் லெப்பை என்பவர் பொய்க் கை எழுத்திட்ட ஒருதனதாவேஜை உபயோகித்த அரசாங்க ஏஜெண்டை ஏமாற்றியதாகக் குற்றம் சாட்டி ஓர் வழக்குத் தொடரப்பட்டது.

பிரஸதாப எதிரி காத்தான்குடி கயபாஷைக் கலாசாலைத் தலைமை ஆசிரியர் டி. சின்னத் தம்பியால் கொடுக்கப்பட்ட ஓர் தாராதரப் பத்திரத்தில் ஆறு VI) என்றிருந்தமையை எட்டு (VIII) என மாற்றி தாம் எட்டாந்தரம் சித்திபடைத்தமையாக அரசாங்க ஏஜெண்டிடம் கூறி அதன் பயனாக தமது விதானைப் பதவியைப்பெற்றுக் கொண்டதாகச் சொல்லப்பட்டது.

எதிரி சார்பில் இ எப். என். கிரேஷியன், கே. வி. ஆறுமுகனார், அரசாங்கஏஜெண்ட்மான் டீ.ட. கரியாதிகாரி டி. டபிள்யூ. செல்வரத்தினம், தலைமை ஆசிரியர். டி. சின்னத்தம்பி, பகுதி கல்வி அதிகாரி ஏஸ். என் சோமசேகரம், முதலியோர் சாட்சியம் அளித்தனர்.

முடிவில் எதிரி மீது 3 மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. எதிரி இந்தீர்ப்பை ஆட்சேபித்து மனுச் செய்தனர்.

மணலில் 90 மூடை அரிசி

இலங்கைக்கு ஏற்றுமதி செய்யவாம்

போலீஸ் கண்டு பிடித்து பறிமுதல் செய்தது

தரங்கம்பாடி, டிச. 22

தரங்கம்பாடியைச் சேர்ந்த குட்டியாண்டியூர், புதுபரத்தெரு, கடற்கரையோரத்தில் மணலில் 90 மூடை அரிசியை புதைத்து வைத்திருந்ததை பொறையார போலீஸ் சப்-இன்ஸபெக்டர், மதுவிலக்கு சப்-இன்ஸபெக்டர் ஆட்களும் போலிஸகளும் நாலு நாட்கள் தீவிரமாகத் தேடி 90 மூடை அரிசியை ரூ 1200 பெறுமானமுள்ளதை கைப்பற்றினார்கள். இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதற்காக வைத்திருந்த அரிசியென்று கருதப்படுகிறது இது விஷயமாய் போலிஸார் மேலும் புலன் விசாரித்து வருகிறார்கள்.

சட்ட விரோதமாக நெல் கடத்தினார்

ரூ 50 அபராதம்

மட்டக்களப்பு, டிச. 22

ஏராவூரைச் சேர்ந்த மொஹிதீன் பாவா இஸா லெப்பை என்பவர் செங்கலடியிலிருந்து 28 கொத்து நெல்லைச் சட்ட விரோதமாகக் கடத்திச் சென்றதாக ஓர் வழக்குத் தொடரப்பட்டது அவர் மீது மட்டக்களப்பு நீதிபதி ரூ 50 அபராதம் விதித்துள்ளார்.

பித்தளைப் பாத்திரம் களவாடினார்

சலவைத் தொழிலாளி மீது வழக்கு

மட்டக்களப்பு, டிச. 23

ஏறாவூரைச் சேர்ந்த சின்னக்குட்டி பழனி என்பவர் என். முகம்மதுவுக்குச் சொந்தமான பித்தளைப் பாத்திரமொன்றைக் களவாடியதாகத் தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டுவிட்டது.

எதிரி ஒரு சலவைத் தொழிலாளியென்றும், தமது கூலியைக் கொடாததால் வற்புறுத்தித் தமது பணத்தைக் கேட்டதாகவும் அதனால் கோபமடைந்தே பிரஸதாப வழக்கு ஜோடிக்கப்பட்டிருக்கிறதெனவும் எதிரி சார்பில் கூறப்பட்டது.

முடிவில் எதிரி குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. தண்டனை ஒத்திவைக்கப்பட்டு எதிரி 250 ரூபா பிணையில் விடுதலைசெய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

'சுதந்திரம்' என்பது சுத்தப்புரட்டு

இன்றைய இலங்கை அதிகார வர்க்கத்தின் போக்கு

எதிர்காலத்தில் ஏற்படும் ஆபத்தை எண்ணிப்பார்க்க வேண்டும்

சென்ற வாரம் வெளிவந்த "காலய" என்னும் சிங்கள பத்திரிகையில் ராஜா வீரசிங்க என்பவர் பின்வருமாறு எழுதுகிறார்:-

இத்தேச அரசாங்க நிர்வாகமும் உயர் பதவிகளும் இலங்கையர் மயமாக்கப்பட்டுவிட்டதினால் மாத்திரம், தேசத்தின் அடிமைத் தனை நீக்கப்பட்டுவிட்ட தென்றும் பூர்ண சுதந்திரம் கிடைத்துவிட்டதென்றும் சிலர் எண்ணுகிறார்கள், பேசுகிறார்கள், பிரசாரம் செய்கிறார்கள்.

கவர்னர் பதவி சிங்களவருக்கு கிடைக்கப் போவதும், சிங்களக் கொடியை தேசியக் கொடியாக்கி யிருப்பதும் கிடைக்கப் போகிறதென்று சொல்லப்படும் சுதந்திரத்தின் அறிகுறியாம்!

அப்படித்தானென்றால், நம் முன் நிலவும் அரசியல சிக்கல்கள் தீர்ந்துவிடுமா? பலதரப்பட்ட சமூக மக்களிடையே புகைந்துகொண்டிருக்கும் அதிருப்திதான் நீங்கிவிடுமா? அத்யாவசியமான பொருளாதார மந்தம் நீங்கிவிடுமா? வேலையில்லாப் பிரச்னை ஒழிந்துவிடுமா? அல்லது இன்றுள்ள தனிப்பட்ட குடும்ப ஆதிக்கத்திற்குத் தான் முடிவு காணப்படுமா? என்னும் பிரச்னைகளைப்பற்றி யோசிக்கும்போது சுதந்திரம் சுயாதீனம் என்பதெல்லாம் சுத்தப் புரட்டாகவே தேச மக்கள் எண்ணுவார்கள்.

சுதந்திரத்தையும் கொடியையும் சாதியையும் காட்டிக் கொண்டு ஊர் குழப்பம் செய்யும் மனிதர்களுக்கு ஆக வேண்டிய சுதந்திரம் பூர்ணமாய்விட்டது. பட்டம் பதவியும் கிடைத்துவிட்டது. இன்னும் எஞ்சியுள்ளவர்களுக்கும் அவர்களின் பெருமைக்கேற்றவாறு பட்டம் பதவிகள் ஒதுக்கிக்கப்படுமென்பது நிச்சயம். யூ. என். பி அரசியல் வாதிகளும் சாம்ராஜ்ய வாதிகளும் தங்களின் எஜமானரான திரு டி. எஸ். சேனநாயக்கவுக்கு வாழ்த்துப் போற்றி விருந்துபசாரங்களும் செய்விக்கிறார்கள். இப்படியானால்தான் அவர்களின் அந்தஸ்து மென்மேலும் தொடர்ந்து காப்பாற்றப்படுமென்று நம்புகிறார்கள். இதற்காக அவர்கள் பொதுப்பணத்தில் பெருவைபவங்களையும் கொண்டாடப்போகிறார்கள். இப்படியெல்லாம் என்ன தடபுடல்களை செய்தபோதிலும் நாளைக்கு நிகழப்போகும் எதிர்பாராத சம்பவங்களை இவர்களுக்கு தடை செய்ய முடியுமா?

இன்றைக்கு வாய்விட்டுப் பேச தடைசெய்யப்படுகிற அற்ப விஷயங்கள், நாளைக்கு பெரியவோர் தேசப் பிரச்னையாகிவிடுகிறது. அச் சமயத்தில் இந்த ஊர்ப் புரளிக்காரர்களின் போலி வேஷத்தை பொது மக்கள் களைந்துவிடுவார்களென்பது நிச்சயம். இவர்களின் இன்றைய விநோதம், நாளைக்கு பொதுமக்களின் விரோதமாய் விடும்.

இவர்கள் கொண்டாடப் போகும் சுதந்திர தினவிழாவிலும் விருந்துபசார உற்சவங்களிலும் தேச மக்களிடமிருந்து இவர்கள் சுதந்திரமடைவதற்கு இருந்த வழி தடைபட்டு போவதே கண்ட பலனாகும். தேச மக்களின் அத்தியாவசியத்தேவைகளை சமர்ப்பிக்கும் போது, எவ்வித பதிலும் கொடுப்பதற்கு இத்தேச நிர்வாகத்தை கைப்பற்றியிருக்கும் இவர்களுக்கு முடியாமற்போகும் அப்பொழுதுதான் ஆயுதபலத்தாலும் அதிகாரத் தோரணையாலும் சாம்ராஜ்ய வாதிகளை கூட செய்யாத கஷ்ட நிஷ்டூரங்களை சுதேசிய பணக்கார வர்க்கம் கையாள நேரிடும் இந்தச் சமயத்தில்தான் இத்தேச கொடுங்கோல் அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்குமிடையே சரியான போராட்டத்திற்கு அடிகோலப்படும். இந்த விலக்க முடியாத உண்மையை இன்றைய அதிகார வர்க்கம் தூர திருஷ்டியுடன் அறியுமாயின் அவர்கள் தேச மக்களின் சமமதத்துடன் நடந்துகொள்ளுவார்கள். சுதந்திர தின வைபவத்தைக் கூட கொண்டாடுவதை கைவிட்டுவிடுவார்கள்.

ஹக்மனைத் தேர்தல் எதிரொலி

வாக்கெடுப்புள்ள ஏஜெண்டைக் கடத்திச் சென்றனர்

எதிரிகளுக்குக் கடுமியச் சிறைத் தண்டனை

மாத்தறை, டிச 23

ஹக்மனைப் பாராளுமன்ற தேர்தலின்போது கமியூனிஸ்ட் பாராளுமன்ற அங்கத்தினர் பிரேமலால் குமாரசிரியின் சார்பில் வாக்களிப்பு ஸ்தல ஏஜண்டாக வேலைசெய்த அந்தனி அப்பு முதலாளி என்பவரைப் பலவந்தமாகக் கடத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கில் கே பி, சிங்கோ அப்பு, என். ஜோன் சிங்கோ, டபிள்யு. கரோலிஸ் அப்பு என்ற மூவருக்கு தலைக்கு ஒரு வருட கடுமியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அந்திரிஸ் அப்பு முதலாளி, ரோய் ராஜபக்ஷ, மகாநாம சமரவீர ஆகிய மூவரும் ஒரு லொறியில் சென்றுகொண்டிருந்ததாகவும் வழியில் ஓரிடத்தில் லொறி நின்றதும் ஒரு ஜனக் கோஷடி லொறியைச் சூழ்ந்ததாகவும் சொல்லப்பட்டது. அப்போது முன்குறித்த மூன்று எதிரிகளும் உள்ளே புகுந்து முதலாளியைத் தூக்கிச்சென்றதோடு மற்றவர்களைக் கத்தி ஒன்றைக் காட்டி பயமுறுத்தியதாகவும் தெரிகிறது. குறித்த அந்திரிஸ முதலாளி தேர்தல் தினத்துக்குப் பிறகே அவர்களால் விடுதலை செய்யப்பட்டார்.

எதிரிகள்மீது இரு குற்றங்கள் சுமத்தப்பட்டன. சட்ட விரோதமாக கடத்திச் சென்றமைக்கு ஒரு வருட கடுமியச் சிறைத்தண்டனையும், தவறாக சிறைப்படுத்தி வைத்தமைக்கு 6 மாதக் கடுமியச் சிறைத்தண்டனையும்விதிக்கப்பட்டது. இத்தண்டனைகள் இரண்டும் ஏக காலத்தில் அனுபவிக்கப்படும்

கொலை!

கொட்டா ரோட்டில் கோரசம்பவம்

கொழும்பு, டிச. 23

இன்றுகாலை 7-15 மணிக்கு கொட்டா ரோட் தெற்கு பொலச்சந்தியில் வெளிக்கடையைச் சேர்ந்த கொஸடர் எனபவன் கத்திபால் குத்திக் காயப்படுத்தப்பட்டான். அவன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்ட சிறிதுநேரத்தில அவன் உயிர் பிரிந்துவிட்டது. எதிரி இன்னுங் கைது செய்யப்படவில்லை. பொலிசார் புலன் விசாரித்து வருகின்றனர்.

பள்ளி மாணவரும் வேலை நிறுத்தம்செய்கின்றனர்

வாஷிங்டன், டிச. 23

வாஷிங்டனிலுள்ள 40,000 நீக்ரோ மாணவர்கள் தங்கள் பள்ளிக்கூடங்களில் இடவசதி முதலியவை கவனிக்கப்படாதமையால் பள்ளிக்கூடம் செல்ல மறுத்தனர். ஆனால் நீக்ரோ வுன்னில் தலைவர் எட்கார் பிரௌன் தலையிட்டினால் சமரசப் பேச்சுகள் வெற்றிபெற அவர்கள் பள்ளிக்கூடம் செல்கின்றனர். [ராய்ட்டர்]

'தமிழ் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தேர்தலில் கட்சி சார்ந்து உழைத்தார்களாம்!'

யாழ்ப்பாண நகர சபைத் தலைவரின் புகார்

முதலியார் இராஜேந்திராவுக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், டிச. 2

அகில இலங்கைத் தொண்டமைத் தமிழர் மகா சபையார் சென்ட் சபை அங்கத்தவராகிய முதலியார் திரு. ச. வி. ராஜேந்திரா அவர்களுக்கு யாழ்ப்பாண நகர மண்டபத்தில் அளித்த வரவேற்பில் யாழ்ப்பாண நகர சபைத் தலைவர் திரு. வி. பொன்னம்பலம் பேசியபோது சென்ற பாராளுமன்றத் தேர்தலில் அரசாங்க உத்தியோகத்தர் கூட்டமாகத் தமிழர் எல்லோருங் கட்சி சார்ந்து வேலை செய்தார்கள் என்று குற்றஞ் சாட்டினார்.

இவ்வரவேற்புக் கூட்டத்திற்கு வழக்கறிஞர் திரு. ஏ. ஆர் சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

கூட்டம் தொடங்கி சிறிது நேரத்திற்குப் பின்பு மேடைமீது அமர்ந்திருந்த யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டவர் அவர்களும் வட மாகாண ஏஜண்ட் திரு. பி ஜே. ஹட்ஸன் அவர்களும் சபையை விட்டுச் சென்றார்கள்.

சம்பத்திரியார் கல்லூரித் தலைவர் அதி. வண. டி. எம். எப். லோங் சுவாமியார் அவர்கள் பேசியபோது முதலியார் இராஜேந்திரா அவர்களுக்கு இன்று ஓர் மகத்தான நாள் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து லோங் சுவாமியார் கூறியதாவது:-

திரு. ராஜேந்திராவின் சாதியத்தாருக்குள்ள குறைபாடுகளை இவர் ஒருவரே நீக்கி இன்று தேச சட்டசபையில் உயர்ந்தவர்களுடனும் பெரியவர்களுடனும் வீற்றிருக்கும் பாக்கியம் பெற்றுள்ளார்.

இன்று அவருடைய சாதியத்தாருக்கும் ஒரு பெரும் நாள் அவர்கள் இப்பொழுதுதான் சிறிதளவாவது இந்நாட்டின் அரசியலில் பங்குபற்றும் காலம் கிடைத்துள்ளது.

திரு ஜே. டி. ஆசீர்வாதம் பேசியதாவது:-

"மேற் சபையிலும் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு எங்கள் சிறுபான்மைத் தமிழர் மகா சபை போராடவே செய்யும்."

முதலியார் திரு இராஜேந்திரா பதிலளிக்கையில் கூறியதாவது:-

"சிறுபான்மைத் தமிழர் மகா சபை எனது மேல் சபை அங்கத்துவத்தைக்காகப் போராடியதற்காக நான் என்றும் அவர்களுக்குக் கடப்பாடுடையேன்

என்னுடைய கொள்கை இக்காட்டிலுள்ள சகல ஜாதியினரும் ஒற்றுமையாகவும் பரஸ்பர சேவாவத்துடனும் இருக்கவேண்டுமென்பதுதான்.

பாரசீகத்தின் புதிய பிரதம மந்திரி

டெஹ்ரான், டிச. 22

பாரசீக மன்னர் 75 வயதுள்ள டாக்டர் முகமது ஹக்கிமியை இன்று பிரதம மந்திரியாக நியமித்திருக்கிறார்.

இத்தாலியின் புதிய அரசியல் திட்டம்

ரோமாபுரி, டிச. 22

இத்தாலிய பாராளுமன்றத்தில் புதிய அரசியல் திட்டம் நிறைவேற்றப்பட்டது. ஏப்ரல் மாதப் பொதுத் தேர்தல் நடைபெறும்.

சீன உள்நாட்டு யுத்தம்

ஷாங்கை, டிச. 22

மூக்டா னுக்கு 20 மைல தூரத்தில் முன்னேறிவந்த கமியூனிஸ்ட் துருப்புகளை சீன அரசாங்கத் துருப்புகள் மும்முரமாக எதிர்த்தன. சீன கமியூனிஸ்டு துருப்புகளுக்கு ரஷிய ஆலோசனையாளர்களிருந்துவருகிறார்கள் என்றும் ஆனால் அவர்களில் ஒருவராவது அகப்படவில்லையென்றும் சியாங்கை ஷேக் அறிவித்தார். இப்பகுதியிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்கள் சீன கமியூனிஸ்டுகளிடமிருக்கின்றன.

மார்க்கெட் நிலவரம்

தயகம் வெள்ளி விலை

கொழும்பு, டிச. 23

தரகப்பவுன் விற்கும் விலை	ரூ. 70-00
அரசர பவுன் "	ரூ 40-00
வெள்ளி [நூறு ரூபாய் கொண்ட எடை] "	180-00

ரப்பர்

(கமிஷனர் ஏற்றுமதி)

ஷீட்	த. 1	ராத்தல்	00-82
"	த. 1	"	00-55
"	த. 2	"	00-55
"	த. 3	"	00-52 1/2
"	த. 4	"	00-48
"	த. 5	"	00-45

கொப்பரா

எஸடேட் த. 1 தரம் டன் ஒன்றுக்கு	ரூ. 1 5-00
தேங்காய் எண்ணெய் தேங்காய் எண்ணெய் டன் ஒன்றுக்கு	ரூ 819-00
தேங்காய் புண்ணாக்கு டன் ஒன்றுக்கு	ரூ. 92-50

கொக்கோ

த 1 தரம்	00-95
" 2 "	00-85
" 3 "	00-70

தேயிலை

த 1 ரகம்	1-85
த. 2 "	1-64
த. 3 "	1-54

இலங்கைப் பெண்கள் விழிப்பு

புதுவருடத்தில் இடதுசாரி மாதர் ஸதாபனம் உதயம்

கொழும்பு, டிச. 23

புதுவருடத்துடன் ஓர் புதிய அரசியல் ஸதாபனம் இவ்வருடம் உருவாகும் என்று அறியப்படுகிறது. இது ஓர் மாதர் ஸதாபனம் என்றும் பல இடதுசாரிப் பெண்மணிகள் இதற்காக முயன்று வருகின்றனர் என்றும் தெரியவந்துள்ளது. ஜனவரி 5-ம் தேதி இது சம்பந்தமாக ஓர் கூட்டம் நடக்கும் இக்கூட்டத்திற்காக முயன்று வரும் முக்கிய பெண்மணிகள் பின் வருமாறு:-

டொரீன் விக்கிரமசிங்க (கமியூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் எஸ் ஏ விக்கிரமசிங்காவின் மனைவி) செலீனா பெரேரா (சமசமாஜ கட்சித் தலைவர் என் எம். பெரேராவின் மனைவி) லீலாவதி ராஜசிங்கம் (டாக்டர் ரீ. ராஜசிங்கத்தின் மனைவி) ஸ்ரீமதி ரோஸ் டி. சேரம், ஸ்ரீமதி டல்லாஸ் குணசேகரா, ஸ்ரீமதி லுடொவைக், (பேராசிரியர் லுடொவைக்கின் பாரியார்)

ஸதாபனத்தின் பெயர் இதுவரை நிர்ணயமாகவில்லை.

அரசியல் சட்டத்திற்கு ஓர் திருத்தப் பிரேரணை

ஜனவரி 14-ந் தேதி கொண்டுவரப்படும்

சுதந்திர விழாவுக்கு விசேஷ போனஸ் வழங்கவும்

பர்மா மூன்மாதிரியைப் பின்பற்றுக

திரு. கனகரத்னம் கேட்கவிருக்கும் கேள்விகள்

கொழும்பு, டிச. 23

ஜனவரி 14-ம் தேதி பாராளுமன்றக் கூட்டத்தின் போது மு. எப். என். கிரேஷியன், வில்மட் ஏ பெரேரா எஸ். ஜே. வி செல்வநாயகம் ஆகியோரின் இருதனிப் பிரேரணை ஒன்று சர்ச்சை செய்யப்பட இருக்கிறது. இப்பிரேரணை சிறைவாசம் அனுபவித்தவர்கள் அடுத்த ஏழு வருடங்களுள்பாராளுமன்றத்திற்கோ செனட்சபைக்கோ செல்லக்கூடாதென இருப்பதை மாற்றுவதற்கும், மூன்று மாதகாலம் அல்லது அதற்குக் குறைவாக சிறைத்தண்டனை அனுபவிக்கும் பாராளுமன்ற அங்கத்தினர்களின் பதவி ரத்தாகாமல் இருப்பதற்குமாகக் கொண்டுவரப்படுகிறது.

மேற்கண்ட பிரேரணை இலங்கை அரசியல் சட்டத்தில் ஓர் திருத்தமாகக் கொண்டுவரப்படுகிறது.

ஜனவரி 12-ம் தேதி பாராளுமன்றத்தில் நிதி மந்திரியிடம் கீழ்க்கண்ட இரு கேள்விகளையும் திரு கே. கனகரத்னம் அவர்கள்கேட்பார்:-

பர்மா அரசாங்கம் பர்மா சுதந்திர தினமான ஜனவரி 4-ம் தேதியன்று நடக்கும் கொண்டாட்டங்களுக்காக ஒரு மாத போனஸ் எல்லா அரசாங்க ஊழியர்களுக்கும் வழங்கத் தீர்மானித்திருப்பதை மந்திரி அறிவாரா? அதே போல் கமிஷன், பிரதிநிதிகள் சபை ஆகியவற்றின் அனுமதிபெற்று 500 ரூபாவுக்குக் குறைந்த சம்பளமும் உபகாரச் சம்பளமும்பெறுவரும் அரசாங்க மாதச் சம்பள, தினச் சம்பள ஊழியர்களுக்காவது ஒரு மாதப் போனஸ் பெப்ரவரியில் நடக்கவிருக்கும் சுதந்திர விழாவை முன்னிட்டு வழங்குவதற்கு மந்திரியார் முன்வருவாரா?

2 பௌத்த மத நாடான பர்மா புத்தரின் கொல்லாவிரதக் கொள்கையைக் குவலயத்துக்கு எடுத்து வற்புறுத்துவதோக்கத்துடன் ஜனவரி 8-ம் தேதி தொடக்கம் 7-ம் தேதி வரை சுதந்திர விழாவை முன்னிட்டு மிருகங்களை வதை செய்வதையும், புலால் உண்ணலையும் தடுத்திருப்பதை அறிவாரா? இங்கு பெப்ரவரியில் நடக்கவிருக்கும் சுதந்திர விழாவை முன்னிட்டு அத்தகைய தடையை மந்திரியார் ஏற்படுத்த எண்ணியுள்ளாரா?

கண்டி தேர்தல் ஆட்சேபனை வழக்கு

பலர் சாட்சியம் கொடுத்தனர்

கொழும்பு, டிச. 23

கண்டி தேர்தல் ஆட்சேபனை வழக்கின் விசாரணை நேற்று தொடர்ந்து நடைபெற்றது. இவ்வழக்கில் மீன்பிடி கைத்தொழில் ஆராய்ச்சி மந்திரியாரது ஈ. டி. சில்வாவின் தேர்தலை ஆட்சேபித்து டி. பி. இலங்கரத்ன, ஜோன் வீரசேகரா ஆகியோர் இரு மனுக்கள் சமர்ப்பித்துள்ளனர்.

நேற்றைய விசாரணையின் போது எச். பி. தர்மசேன, எச். எல். குணவர்தன, ஜே. வி. பொன்சேகா, ஆர் எம் அபயரத்ன ஆகியோரை மிஸ எப். எம். எலியாஸ, ஜே. பி எச். குணசேகரா, அயல்நாட்டு மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி கே வைத்தியநாதன், என் இனியதம்பி, யூ. பி. ஏகநாயக்கா, கே. பி. சேனாரத்ன முதலியபலர் சாட்சியங்கொடுத்தனர்.

இந்தியா-பிரிட்டன் நிதி ஒப்பந்தம்

ஜனவரி 7-ந் தேதி சம்பாஷணை நடைபெறும்

லண்டன், டிச. 23

பிரிட்டிஷ் பொக்கிஷக் காரியாலயம் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறது:-ஆகஸ்ட் 14-ந் தேதி ஏற்பட்ட இந்தியா பிரிட்டன் நிதி ஒப்பந்தத்தின் ஏற்பாடு இப்பொழுது இந்தியா யூனியனுக்கும் பிரிட்டனுக்குமிடையே நிதி ஒப்பந்த மேற்படுத்தவும், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நிதி ஒப்பந்த மேற்படுத்தவும், இந்திய அரசாங்கத்தின் அழைப்பின்மீது ஜனவரி 7-ந் தேதியன்று புதுடில்லியில் பிரிட்டிஷ் தூது கோஷ்டியும் பாகிஸ்தான் தூது கோஷ்டியும் இந்திய தூது கோஷ்டியைச் சந்தித்துப் பேசும். பிரிட்டிஷ் தூது கோஷ்டி டில்லிக்குப் போவதற்கு முன் கராச்சியில் தங்கி பாகிஸ்தான் தூது கோஷ்டியைச் சந்தித்துப் பேசும். பிரிட்டனுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே பிரத்தியேகமாக நிதி ஒப்பந்தம் கராச்சியில் வைத்து கைச்சாத்திடப்படும்.

இந்திய தூது கோஷ்டிக்கு வி. நரஹரிராவ் தலைவர். பாகிஸ்தான் தூது கோஷ்டிக்கு முஹம்மது அலி தலைவர், பிரிடிஷ் தூது கோஷ்டிக்கு சர் ஜெரமி ரெய்ஸமன் தலைவர்.

கல்வியே கருந்தனம்

கட்டிடத்துக்கு தேவையான சிமந்தும் மற்றச் சாமான்கள் எல்லாம் எங்களிடம் குறைந்தவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கம் - கொம்பனி
No-38. மூன்றுங்குறுக்குத் தெரு, புறக்கோட்டை, கொழும்பு.
டெலிபோன்: 2039 டெலிகிராம்: 'ENVAITLIN
கிளை:- பெரியகடைத் தெரு, யாழ்ப்பாணம் டெலிபோன்: 30.

ஐசிங் சுகர்
இலங்கையில் முதல்தரமானது
குயின் (ராணி) மார்க்.
இப்போ எங்களுக்கு ஏற்பட்ட சில வசதிகளால் விலை மிகவும் குறைக்கப்பட்டு இருக்கின்றது.
7 ருத்தல் டின்னில் அந்தர் ஒன்றுக்கு ரூ. 160-00
28 ருத்தல் டின்னில் அந்தர் ஒன்றுக்கு ரூ. 150-00
எங்கள் ஸ்டோர் நிர். 307, செட்டியார் தெருவில் (சீ ஸ்டிரீட்) எடுத்துக்கொள்ளலாம்.
குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி,
861, அறுத்மாவத்தை ரோடு,
முகத்துவாரம்,
கொழும்பு.
தந்தி "Confection" 'போன்: 4511

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்கு இணையற்றது
தாதுசத்துக்கள் நிறைந்த மேற்கண்ட எமது குளிர் பானங்களைக் கவிரும்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள்:-
ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டீ ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்
தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி, கொழும்பு.
போன்:- 2193
ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களில் ஆயுர்வேத வைத்தியசாலைகள் ஸ்தாபிக்கப்படல் வேண்டும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு வி. குமாரசாமி பேசுகையில், 90 சத விகிதமான சங்கக் கடை அங்கத்தினர் தாவர போஜனம் செய்பவர்களாக இருக்குமிடங்களுக்கு தகரங்களிலடைக்கப்பட்ட இறைச்சி வகைகளும், மாசியும் அனுப்பப்படுகின்றன வென்றும் தேவையில்லாத இப்பொருள்கள் மார்க்கெட்டுகளுக்கு போய்ச் சேருகின்றனவென்றும் சங்கக் கடைகளுக்கு பொருளுகள் தேவைக்கு ஏற்றபடி விநியோகிக்க ஏற்பாடுகள் செய்ய மந்திரி கவனிக்க வேண்டுமென்றும் கூறினார்.

திரு அல்பர்ட் பீரிஸ பேசுகையில் முழு சங்கக் கடை இயக்கமும் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்றும், திரு பீட்டர் கெனமன் பேசுகையில் கிராமப் பகுதிகளில் உள்ள சங்கக் கடைகள சங்கக் கடை இன்ஸ்பெக்டர் முதலானோருடன் பொதுமக்களாலும் மேற்பார்வையிடப்பட வேண்டு மென்றும் கூறினார்கள்.

இந்த விவாதத்தின் போது பொருள் கொள்வனவு சம்பந்தமாக ஒதுக்கப்பட்ட மான்யம் பற்றியும விவாதிக்கப்பட்டது.

டாக்டர் பெரேரா பேசுகையில் இது விஷயங்களுக்கு பொருள் கொள்வனவு இலாகா பணம் கொடுக்க ஏன் முடியாதென்று கேட்டார். இதனை திரு பீட்டர் கெனமனும ஆதரித்தார். இதற்குப் பதிலளித்த பிரதமர், பொருள் கொள்வனவுத் திட்ட முழு வேலைகளையும் பொருள் கொள்வனவு - விற்பனவு இலாகா கையாளுவதில்லை யென்று கூறினார்.

கூட்டுறவு இயக்கங்கள் திட்டமான அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்களின் வங்கிகள் மூலம் நிதி உதவிபெற்று நடத்தப்பட வேண்டுமென டாக்டர் பெரேரா கூறினார்.

பொருள் கொள்வனவு இலாகா பணம் கொடுக்க மாட்டாதென்றும் அவ்விதம் கொடுப்பினும் 5 சத விகித வட்டி வசூலிக்குமென்றும் இரு இலாகாக்களும் ஒன்றல்ல வென்றும் திரு டி. எஸ். சேனநாயகா கூறினார்

இரு இலாகாக்களையும் ஒன்றாக இணைக்கும்படி டாக்டர் பெரேராவும், அரசாங்கம் ஒரு கள்ளமார்க்கெட்டு இலாகாவை அபிவிருத்திசெய்யமுயற்சிக்கிறதா வென்று திரு. ராபர்ட்குணவர்தனவும் கேட்டார். டாக்டர் பெரேராவின் திருத்தப்பிரேரணை தோல்வி யுற்றது. மான்யம் நிறைவேறியது.

சங்கக்கடை அபிவிருத்தி கமிஷனர் (பகுதி 83) இலாகா மான்யம் ரூ. 131,943 சம்பந்தமாக விவாதம் நடைபெற்றது. சங்கக்கடைகளில் முக்கிய பொருள்கள் இல்லாமை குறித்து பல அங்கத்தினர் பேசினர். இவற்றைக் கவனிப்பதாக மந்திரிபதிலளித்தார்.

சங்கக்கடை இயக்கத்தை அரசாங்கம் தனிப்பட்டவர்களிடம் ஒப்படையாது தொடர்ந்து நடத்த வேண்டுமென்றும் உணவுப்பொருள் முதலியன இறக்குமதியும் விநியோகமும் முழுக்க அரசாங்கமே நடத்த வேண்டுமென்றும் கூறினார். திருத்த பிரேரணைகளைக் கொண்டுவந்தோர், அவற்றை வற்புறுத்தவில்லை' மானயம நிறைவேறியது.

சுகாதார முதல் ஸதாபன மந்திரி இலாகா (பகுதி 87) மான்யம் ரூ 164,087 சம்பந்தமாக விவாதம் நடந்தது. திரு தஹநாயகா பேசுகையில் ஆஸ்பத்திரிகளில் உள்ள இட நெருக்கடிகள் பற்றி கூறிப்பிட்டுவிட்டு காசநோயாளர் சுமார் 60,000 பேர்கள் ஆஸ்பத்திரிகளில் இருப்பதாகவும் ஆனால் அவர்களுக்கு 1218 படுக்கைகள் தான் இருக்கின்றன வென்றும் இந்நோயாளருடன்பக்கத்தில்வேறு நோயாளர்களும் வைக்கப்பட்டிருப்பதாகவும் இந்த நிலைமை தொடர்ந்திருப்பதைத் தடுக்க வேண்டுமென்றும் கூறினார். மந்திரியின் சம்பளத்தில் ரூ. 10 குறைக்க வேண்டுமென இவர் ஒரு திருத்தப் பிரேரணைகொண்டுவந்தார்.

திரு பீட்டர் கெனமன் பேசுகையில் வைத்திய இலாகாவின் கொள்கை என்ன வென்றும் இலங்கை முழுமையும் பெரிய ஆஸ்பத்திரிகளும் மததிய வைத்திய சாலைகளையும் ஸ்தாபிக்க மந்திரி முன் குறிப்பிட்டிருந்தாரென்றும் இலாகா நிர்வாகம் பற்றியும் கூறினார்.

பேராசிரியர் எஸ். பேக்மன் பேசுகையில் மன நோயாளர்களுக்கு வைத்திய உதவியளிப்பது சம்பந்தமாக "மேபொதா" சிபார்சுகள் எவ்வளவு அமுலுக்கு வந்துள்ளன வென்றும் ஆஸ்பத்திரிகளில் காசநோயாளர் மற்ற நோயாளருடன் வைக்கப்பட்டிருத்தலைக் கண்டித்தும் பேசினார். அவர் மேலும் பேசுகையில் கட்டிடங்கள் புதிதாக கட்டப்பட வேண்டுமென்றும் இந்த இலாகா நிலைமைகள் அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென்றும் மந்திரியும் அவரது இலாகாவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கூறினார்.

திரு ஈ. எப். என். கிரேஷியன் பேசுகையில் குடிசை ஆஸ்பத்திரிபற்றியும் மனநோயாளர் சம்பந்தமான சட்டத்தை திருத்தவேண்டுமென்றும் ஜனநெருக்கமுடைய நீதி மன்றங்களில் மனநோயாளரைக் கொண்டு போய் காட்டவேண்டியிருப்பதால் பலவித அசௌகரியங்களும் இருப்பதாகவும் இதனால் பழைய சட்டத்தை அவசியம் திருத்த வேண்டுமென்றும் கூறினார்.

திரு கே. ஹொராத் பேசுகையில் நாட்டுப் பகுதிகளில் மக்கள் தேவைகளைப்பூர்த்திசெய்ய வைத்திய வசதிகள் உள்ள மோட்டார்களை வைத்திருக்க வேண்டுமென்றும் இத்தகைய மோட்டார் வான்களை வைத்திருப்பதால் துரிதமாக அவசிய நடவடிக்கைகளை எடுக்கலாமென்றும் குருமாருக்கு ஆஸ்பத்திரிகளில் விசேஷ வார்டுகள் ஒதுக்கப்பட வேண்டுமென்றும் கிராமப்பகுதிகளில் உள்ள கிணறுகள் சுகாதார இலாகா அதிகாரிகளால் மேற்பார்வையிடப்பட வேண்டு மென்றும் நோயாளருக்கு உணவுகளைக் கண்டிராக்டர்கள் விநியோகிக்கவிடப்படாதென்றும் பொருள் கொள்வனவு இலாகா இந்த வேலையைச் செய்யும்படி விடப்படவேண்டு மென்றும் கூறினார்.

இதுதுடன் நேரம் மாலை 4 மணியானதால் தேநீர் இடைவேளைக்காக சபை ஒத்திவைக்கப்பட்டது.

தேநீர் இடைவேளைக்குப் பின் திரு வி. டி. நானயக்காரா பேசுகையில் தமது பகுதியில் ஆஸ்பத்திரிகளில்லாதது மிகவும் கஷ்டங்களைக் கொடுப்பதாகவும் [illegible]பல்லில் வசூத்தமுள்ள ஒருவர் பல் பிடுங்குவதற்கு 30 மைல் தூரம் பிரயாணம் செய்யவேண்டியிருப்பதாகவும் கூறினார்.

திரு ஜே. ஸி. டி. கொத்தலாவல பேசுகையில் பதுளையில் உள்ள ஆஸபத்திரி திருத்தப்படவேண்டுமென்றும் ஊவா பகுதி ஆஸ்பத்திரிகள் விஷயத்தில் மட்டுமல்லாது மற்ற விஷயங்களிலும் கவனிக்கப்படவில்லையென்றும் அவர் கூறினார்.

திரு ரெஜி பெரேரா பேசுகையில தகுந்த ஒரு இட்டத்தை மந்திரி தயாரித்துக்கொள்ள வேண்டுமென்றும் அடுத்த 5 வருட காலத்துள் சுகாதாரப் பிரச்னை தகுந்தபடி தீர்க்கப்பட்டிருக்கவேண்டுமென்றும் டாக்டர்கள் குறையைத் தீர்ப்பதற்கு 500 ஏழைப் பிள்ளைகளுக்கு டாக்டர் டரீட்சைக்குட்படிப்பதற்கு அரசாங்க உபகாரச் சம்பளம் வழங்கப்படவேண்டுமென்றும் கூறினார்.

திரு ஜே. ஏ. மார்ட்டின் பேசுகையில் ஆஸபத்திரிகளில் உணவு விநியோகிக்கும் முறைகள் சரியில்லையென்றும், ஆஸபத்திரிகளில் யுத்தகாலத்துக்கு முன்னிருந்த உணவுக் கமிட்டிகள் திரும்பவும் இப்பொழுது நியமிக்கப்படல் வேண்டுமென்றும் கூறினார்.

திரு சாம் சில்வா பேசுகையில் கொழும்புஜெனரல் ஆஸபத்திரியில் நோயாளர் நெருக்கம் மிக அதிகமென்றும் அங்கு நோயாளர் படுக்கைகளுக்குக் கீழும், நிலத்திலும் படுக்கின்றனர் என்றும், லேடி ஹவ்லக் ஆஸபத்திரியிலும் ஜன நெருக்கம் மிகவும் அதிகமென்றும் இங்கு 1360 படுக்கைகள் இருக்கின்றனவென்றும் ஆனால் தினசரி ஆஸபத்திரியில் அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை மிகவும் அதிகமென்றும் நோயாளர்களுக்கு அளிக்கப்படும் உணவு மிக மோசமானதென்றும் கூறினார்.

திரு வி. குணவர்தனா பேசுகையில் ஆஸபத்திரியில் நோயாளருக்குக் கொடுக்கப்படும் பால மிகவும் மோசமானதென்றும் நோயாளர் அந்தப் பாலைக் குடிக்க மறுத்துள்ளனரென்றும் ஆஸபத்திரிகளுக்குப் பொருள் கொள்வனவு இலாகாவைபால் கொடுக்கும்படி ஒழுங்கு செய்யவேண்டுமென்றும் கூறினார்.

திரு ஆர். டி. சொய்ஸா பேசுகையில் வயதானவர்களுக்காக நடத்தப்படும் விடுதிகள சரியான முறைப்படி நடத்தப்படவில்லை யென்றும் வெளிநாடுகளில் அரசாங்க பண உதவியுடன் இத்தகைய முதியோர் விடுதிகள் நடத்தப்படுகின்றனவென்றும் இந்த வரவுசெலவுத் திட்டத்தில் முதியோருக்கு ஒரு விதமானவசதிகளுக்கும் பணம் ஒதுக்கப்படவில்லை யென்றும் ஆஸபத்திரிகளுக்கு அம்புலன்ஸ் படைகள் இருக்க வேண்டுமென்றும் கூறினார்.

திரு சின்னலெப்பை (மட்டக்களப்பு) மட்டக்களப்பு ஆஸபத்திரியில் நோயாளர் அதிகம் என்றும் அங்கு தகுந்த பயிற்சியுடைய வைத்திய அதிகாரிகள் அனுப்பப்படவேண்டுமென்றும் கூறினார்.

திரு என். எச். சீ. தித்திரத்னா பேசுகையில் கேகாலை ஆஸபத்திரி பற்றி பேசினார்.

திரு எஸ். டபிளியூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பேசுகையில் தசத்தின் பொருளாதார வசதிக்கு ஏற்றபடி மற்ற நாடுகளைப் போல இங்கு எல்லா ஆஸபத்திரிகளுக்கும் மருந்துவகைகள் விநியோகிக்க இந்த இலாகா தகுந்த திட்டம வகுத்து வருவதாகவும் காச நோயாளர்களுக்கு இடவசதியளிப்பதற்கு அம்பாந்தொட்டையிலும் புத்தளத்திலும் இரு இடங்கள் அமைக்கப்பட ஆலோசிக்கப்படுவதாகவும் காங்கேசன்துறையில் காசநோய் ஆஸபத்திரி ஸதாபிப்பதற்கு அங்குள்ள மக்கள் எதிர்ப்புக் காட்டுதலால் அது சாத்தியமாக இல்லையென்றும், அம்பாந்தொட்டை காசநோய் ஆஸபத்திரி விஷயத்தையிட்டு அங்கு ஜல வசதி குறைவென்றும் ஜல வசதி திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட 4 லட்சம் ரூபாயையும் இப்பொழுது இருமடங்காக்க ஆலோசிக்கப்படுவதாகவும் இந்நோயைவிட மற்றெல்லா தொற்று நோய்களுக்கும சிகிச்சை யளிக்க தகுந்த ஒழுங்குகள் செய்யப்படுமென்றும் கூறினார்.

திரு கிரஷியனின் கேள்விக்குப் பதிலளிக்கையில் குடிசை ஆஸ்பத்திரிகள் டாக்டர் டபிள்யூ. ஏ. டி. சில்வாவினால் ஆரம்பிக்கப்பட்டன வென்றும் 1941ம் ஆண்டில் 17 குடிசை ஆஸபத்திரிகள இருந்தனவென்றும் 1942-ம் ஆண்டில் கிராம ஆஸ்பத்திரிகளாக இவற்றை எடுக்கப்பட்டதென்றும், 1943 - 47க் கிடையில் இவை போன்ற 125 ஆஸபத்திரிகள் ஸ்தாபிக்கப்பட்டனவென்றும் இவற்றை மத்திய ஆஸ்பத்திரிகள் வைததிய சாலைகள் முதலியனவாக தாம் மாற்ற இருப்பதாகவும் ஆஸபத்திரிகள் வசதி பற்றியும் இடவசதிகளுக்கு புதிய இடங்கள் அமைப்பது பற்றியும் பெரியாஸ்பத்திரி நெருக்கடியைத் தவிர்க்க அங்கொடையில 500 படுக்கைகள் போடதகுந்த இடவசதி செய்ய ஆலோசிதிருப்பதாகவும் பிரசவசாலைகள் கட்டப்படுவது பற்றியும் கூறினார்.

திருத்தப் பிரேரணை வாபஸ பெறப்பட்டபின் இந்த இலாகா மான்ய தொகை நிறைவேறியது.

வைத்திய சுகாதார இலாகா (பகுதி 88) மான்யம் ரூபாய் 6,752,124 சம்பந்தமாக விவாதம் நடைபெற்றது. திரு ஜே. டி. ஸி. கொத்தலாவல ஆஸபத்திரி தாதிப் பெண்கள்பற்றி பேசினார்.

திரு. கே. கனகரத்னம் பேசுகையில் காலி, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில நர்சுகள் பயிற்சி ஸதாபனங்கள் அமைக்கப்படவேண்டுமென்று கூறினார்.

திரு. பண்டாரநாயக்கா பேசுகையில் வேலூருக்கு அனுப்பப்பட்ட இரு பெண்கள் பயிற்சி பெற்று திரும்பியதும் இங்கு பயிற்சி பெறுபவர்களுக்குகற்பிக்கும வேலையில் நியமிக்கப்படுவர் என்றும் சுதேசபாவையில மாத்திரம் கற்ற டெண்களுக்கும் பயிற்சி அளிக்க தாம் ஆலோசித்துள்ளதாகவும் தாதிப்பெண்கள் நகைகள் அணிவது தடுக்கப்பட்டது, நோயாளர்களுடைய கவனத்தைக் கவருமென்பதற்காகவே யென்றும் கூறினார்.

திரு. தஹநாயகா பேசுகையில் ஆஸபத்திரி (அட்டெண்டன்ஸ) சிப்பந்திகள் விஷயமாகப்பேசினார். அவர்கள் சம்பள விஷயங்கள் தொழிற் சங்க உரிமைகள் முதலியனபற்றியும பேசினார்.

இவர் தொடர்ந்து பேசுகையில ஆஸ்பத்திரிகளுக்கு வழங்கப்படும் உணவுகள மிகமோசமானவைகளென்றும் கண்டிராக்டர்களைபபோலவே பொருள் கொள்வனவு இலாகாவும் இருப்பதாகவும் இந்த இலாகா ஆஸ்பதிரிகளுக்கு தேவையான பொருள்களை புறக்கோட்டையில் அதிக விலைக்கு வாங்குவதாகவும் இந்த முறைகள் நிறுத்தப்படவேண்டு மென்றும் கூறினார்.

திரு டி. எஸ சேனநாயகா பேசுகையில் பொருள்கொள்வனவு இலாகா ஆஸபத்திரிகளுக்கு உணவுப்பொருள்கள் கொடுப்பது பற்றி கூறினார்.

திரு நானயகாரா பேசுகையில் ரூ. 95 லட்சம் ஆஸபத்திரி உணவு வகைகள் கொடுப்பதற்கு இவ்வருடத்துக்கு ஒதுக்கப்படடிருப்பதாகவும ஆஸபத்திரிகளுக்கு வழங்கும் பொருள்களுக்கு பொருள் கொள்வனவு இலாகா அதிக விலைகள் வாங்குவதாகவும் இவற்றைக் கட்டுப்படுத்த ஒரு கமிட்டி நியமிக்கப்பட வேண்டுமென்றும் இக்கமிட்டி நியமிக்கபபட்டு சரியான முறைப்படி கட்டுப்படுததப் பட்டால் 30 லட்சம் மீதப்படுத்த முடியுமென்றும் கூறினார்.

திரு சாமசில்வா பேசுகையில் அரசாங்கப் பண்ணையிலிருந்து பழவகைகளும் முட்டைகளும் ஆஸபத்திரிகளுக்கு வழங்கப்படாது அரசாங்க உத்தியோகஸதர்களுக்கு வழங்கப்படுவதாக குறி பிட்டார்.

திரு பண்டாரநாயகா பதிலளிக்கையில் கண்டிராக்டர்கள முறை விரைவில் ஒழிக்கப்படுமென்று கூறினார். மான்யம நிறைவேறியது.

குவாரன்டைன் இலாகா (பகுதி 89) மான்யம ரூ 953,923 நிறைவேறியது அடுததபடியாக ஆயுர்வேதவைததிய [பகுதி 90] மான்யம் ஒதுக்கப்பட்டபோது திரு தஹநாயகா பேசுகையில ஆயுர்வேதவைத்தியமாணவர்கள் குறைபாடுகள் கவனிககப்பட வேண்டுமென்ற கூறினார். நாட்டுப் பகுதிகளில் அதிக ஆயுர்வேத வைததியசாலைகளை அமைக்கும்படி திரு கே. கனகரதனம் கூறினார்.

திரு பண்டாரநாயகா பேசுகையில் இவை பற்றி கவனிக்கப்படுமென்று தெரிவித்தார்.

திரு சிவபாலன் பேசுகையில் ஆயுர்வேத வைத்தியர்களால் அளிக்கப்படும் வைததிய சர்டிபிக்கெட்டுகளை அங்கீகரிக்க வேண்டுமென்றும் திரு ஏ. ஈ. குணசிங்கா பேசுகையில் வைததயர்களின் சர்டிபிக்கெடடுகள் ஏற்கப்பட வேண்டுமென்றும் கூறினார்கள். மான்யம் நிறைவேறியது.

ஸதல ஸதாபன கமிஷனர் (பகுதி 91) இலாகா மானயம ரூ. 18,430,716 சம்பந்தமாக ஹுல்மட பெரேரா, திரு ஸி. குணவர்தனா ஆகியோர் பேசினார்கள். வரிக்கடடுப்பாட்டுச் சட்டங்கள் சம்பந்தமான திட்டங்கள் வேண்டுமென்று திரு குணவர்தனா குறிப்பிட்டார். திரு பண்டார நாயகா பேசுகையில் இலவபற்றி கவனிக்கப்படுமென்றும் வீடமைப்பு தேசிய மயமாக்கப்படுமுன் காணிகள் இல்லாதவர்களை கண்ணியமாக நடத்தவேண்டு மென்றும கூறினார்.

வீடமைப்புத் திட்டமபற்றி திரு குணசிங்காவும் திரு ராபர்ட் குணவர்தனவும் ஸதல ஸதாபனங்களை அதிகரிக்கும்படி திரு பீட்டர் கெனமனும் வரிவீடுகள் பற்றி திரு கீர்த்திரதனவும், ஸதல ஸதாபன வேலைகள் நெருக்கடி பற்றி திரு தஹநாயகாவும் பேசினர். இவை பற்றி கவனிப்பதாக திரு பண்டார நாயகா கூறினார்.

திரு ஜி. ஆர். மோத்தா பேசுகையில் தமது தொகுதியில் வீடுகள் கட்ட இடங்களில்லையென்றும் சிறிய வீடுகள் அங்கு இல்லையென்றும் கூறினார்.

திரு வி. குமாரசாமி பேசுகையில் தமது தொகுதியிலுள்ள சிறிய நகரங்களுக்கு வீட்டு சிலைமை நெருக்கடிகள் பற்றியும், ஜல விநியோக வசதிகளின் மைபற்றியும் எடுத்துக்கூறி இவை கவனிக்கப்பட வேண்டுமென்றும் கூறினார். இத்துடன் இரவு 8 மணியானதால் சபை இரவு போஜனத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. இரவு போஜனத்தின் பின் ஸதல ஸதாபன கமிஷனர் இலாகா மான்யம மீண்டும் எடுக்கப்பட்டது.

திரு தஹநாயகா பேசுகையில் ஏழைகள் சம்பந்தமான சட்டங்கள் சரியாக அமுலுக்கு வரவில்லையென்று கூறினார் திரு சுபசிங்காவும் திரு சுகததாஸாவும் பேசினார்கள்.

திரு பீட்டர் கெனமன் பேசுகையில் ஏழைகள் சட்டத்தை மத்திய அரசாங்கம் அமுலுக்கு கொண்டுவரவேண்டுமென்றும், திரு குணசிங்கா பேசுகையில் இதனை ஆதரித்தும் கூறினார்கள். இவற்றைக் கவனிப்பதாகவும் திரு அல்பர்ட்பீரிஸ் பேசுகையில் ஜல விநியோக திட்டங்கள், ரஸதாதிட்டங்கள் முதலியனவுக்கு அரசாங்க மான்யம் வழங்கப்பட வேண்டுமென்றும் கூறினார். திருவி. குமாரசாமி பேசுகையில் கிராமவேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை அவ் வேலைகளில் ஈடுபட்டுள்ள இன்ஸபெக்டர்கள் மோசடி செய்வதாகவும் தமது தொகுதியில் நிலைமை மிக மோசமாக இருப்பதாகவும் கூறினார்.

இம்மான்யத்தை அதிகரிப்பதாகவும் ஒவ்வொரு பகுதிகளிலும் செய்யப்பட வேண்டிய வேலைகள் பற்றி தமது நிரந்தரக் காரியதரிசியிடம் அங்கத்தவர்கள் தெரிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

ஸதலஸ்தாபனங்களுக்கு மான்யம் ரூ. 2,180,000 அளிப்பது சம்பந்தமாகவும் ஆலோசிக்கப்பட்டது.

திரு. பண்டாரநாயக்கா பேசுகையில் முந்திய யுத்தப் படிச்செலவுகள் கொடுக்கமுடியாதவைகள் என்றும் இனிமேல் வரும் செலவுகளைத் தாங்கள் கொடுக்க முடியுமென்றும் கூறினார்.

இதன் பின் சபை நடவடிக்கைகள் இன்று ஒருமணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

இரண்டு சிங்கக்குட்டிகள் வந்துசேர்ந்தன

கரடி, கார், வெங்காயம் முதலியனவும் வந்தன

கொழும்பு, டிச. 22

நேற்று கொழும்பு துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த "குவெடா" என்னும் கப்பலில் இரண்டு சிங்கக் குட்டிகள், ஒரு சிரியா தேசக் கரடி ஆகியவை வந்து சேர்ந்தன. இவை தெஹிவளை மிருகக் காட்சிசாலைக்கு லண்டனிலுள்ள ஒரு மிருகக் காட்சிசாலையிலிருந்து அனுப்பப்பட்டுள்ளது. பதிலுக்கு இலங்கையிலிருந்து சிறுததைப் புலிக்குட்டிகள், மலைப் பாம்புகள் குரங்குகள் முதலின அனுப்பிவைக்கப்படும்.

இவை தவிர 32 பந்தயக் குதிரைகளும், 100 மோட்டார் கார்களும் இக் கப்பலில் வந்து சேர்ந்தன

எகிப்திய துறைமுகங்களிலிருந்து வெங்காய இறக்குமதி செய்யப்படுவதில் இருந்த தடை இப்போது ரத்தாகிவிட்டது. இதன் காரணமாக சனிக்கிழமை 500 டன் வெங்காயம் இலங்கை வந்துசேர்ந்தது.

டில்லி செல்லும் இ. இ. காங்கிரஸ தூதுக்கோஷ்டி

கொழும்பு, டிச. 22

இலங்கை இந்தியன் காங்கிரஸ் தூதுக்கோஷ்டியைச் சேர்ந்த செனட்டர் திரு. பெரி சுந்தரம் இன்று காலை 7-30 மணிக்கு விமான மார்க்கமாக சென்னைக்கு புறப்பட்டுச் சென்றார். ஏற்கனவே சென்னை சென்றிருக்கும் இ. இ. காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான், திரு டி. இராமானுஜம் முதலியவர்களுடன் நாளை சென்னையிலிருந்து டில்லிக்குப் புறப்படுவார்கள். டில்லிக்குப் புறப்படுமுன் திரு. பெரிசுந்தரத்தைப் பேட்டி கண்ட நமது நிருபரிடம் தாங்கள் டில்லி சென்று, இந்தியபிரதமர் நேருஜிக்கும் இலங்கை பிரதம மந்திரி சேனநாயக்காவுக்குமிடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகளைக்கவனிக்க போவதாகவும் தங்கள் தூது இலங்கை-இந்திய பிரச்னைகளை சுமுகமாகத தீர்ப்பதற்கு நிச்சயமாயுசுவிபுரியுமென்று நம்புவதாகவும் கூறினார்.

தாங்கள் டில்லிக்கு தூது போவதைப்பற்றி சில பததிரிகைகள் விஷமத்தனமாக பிரசாரம் செய்வதை வன்மையாக கண்டிப்பதாகவும் அவர்சொன்னார். இலங்கை இந்தியன் காங்கிரஸைச் சேர்ந்த ஜனாப் ஸலீல் நேற்று முன் தினம டில்லி சென்றுள்ளார்.

சுதந்திர தினத்துக்காக அரசாங்க ஊழியருக்கு போனஸ

கொலைகளும் புலால் உணவும் நிறுத்தப்படுமா?

வட்டுக்கோட்டை பிரதிநிதியின் கேள்விகள்?

கொழும்பு, டிச. 23

வட்டுக்கோட்டை தொகுதி பிரதிநிதி திரு கே. கனகரத்தினம் 1948 ஜனவரி 5-ந் தேதி நிதி மந்திரியையும், பிரதமரையும் கேட்கும் இந கேள்விகளாவன:-

(1) 1948 ஜனவரி 4-ந் தேதி பர்மா பூரண சுதந்திர தினத்தை அடைவதை முன்னிட்டு அங்குள்ள எல்லா அரசாங்க உதயோகஸதர்களுக்கும் ஒரு மாதச் சம்பளத்துக்குச் சமமான போனஸ அளிக்க பர்மா அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ்விஷயம் நிதி மந்திரிக்குத் தெரியுமா?

இலங்கையின் சுதந்திர தினத்தை 1948 பிப்ரவரியில் கொண்டாடப்போவதை முன்னிட்டு பர்மாவைப் போல இங்குள்ள அரசாங்க உத்தியோகஸதர்களுக்கும் குறைந்தது (மாதச் சம்பளம் பெறுபவர்களுக்கும் பென்ஷன் ரூ. 500 க்குள் எடுப்பவர்களுக்கும்) ஒரு மாதச் சம்பளத்துக்குச் சமமான போனஸ கொடுப்பதற்கு மந்திரியினதும் பாராளுமன்ற சபையினதும் அனுமதியை நிதி மந்திரி பெறுவதற்கு முயற்சிப்பாரா?

(2) பர்மா சுதந்திர தினத்தை முன்னிட்டு 1948 ஜனவரி 3-ந் தேதிக்கும் 7-ந் தேதிக்கும் இடையில் மிருகங்களைக் கொலை செய்வதையும் ஊண் உண்பதையும் பர்மா அரசாங்கம் தடை செய்துள்ளது .மனிதவர்க்கத்துக்கும் ஜீவராசிகளுக்கும் நீதி நிழைகாது புத்த பகவானின் அன்புப் போதனைகளை உலகுக்கு எடுத்துக் காட்டவே அவர்கள் இவ்வித நடவடிக்கையை எடுத்துள்ளனர். இது விஷயம் பிரதம மந்திரிக்குத தெரியுமா? இலங்கையின் சுதந்திரதினத்தை முன்னிட்டு 1948 பிப்ரவரியில் இதுபோன்ற தடையை இலங்கையிலும் பிரதமர் அமுலுக்கு கொண்டு வருவாரா?

சர்வ கலாசாலை நியமனங்கள்

கொழும்பு, டிச. 22

ஏ எம். ஏ. அஜீஸ், வி. ஈ. எச். டி மெல் ஆகியோர் சர்வகலாசாலைக் கோர்ட்டின் அங்கத்தினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகளாலேயே இவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன்,
எம். எஸ். சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம்
ஆகியோர் திறம்பட நடிக்கும்
கன்னிகா
மகத்தான
6-வது வாரம்
பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடன்ங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங்கவரும் உயரிய நடிப்புடன் நிறைந்தது.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.
தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு
முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, குக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்
'இழந்த உறுதி'
என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்
புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 24-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கூடத்தில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org